தென்மொழி

தமிழ் ஆர்ப்பரிப்பா? வெட்கம்!

தமிழரசின அவைத்தலைவர்
செய்தித்தாள் நடத்துகின்றார்;
'தினத்தந்தி' 'ராணி' என்றே!
உமிழ்கின்ற கொச்சை நடை;
உடை களையும் புகைப் படங்கள்;
ஊர்கெடுக்கும் உரைகள்; காட்சி!
தமிழ் நாட்டின் இளைஞர்கை
மிளிர்தலெல்லாம் 'பேசும் படம்''
'குமுதங்'கள் இழிந்த நூல்கள்!
அமிழ்கின்ற பண்பாட்டில்
தமிழ் என்ற ஆர்ப்பரிப்பா?
போர்ப்பாட்டா? அந்தோ! வெட்கம்!

சுவடி: இ: ஓலை: ௧0. நளி (கார்த்திகை) ௧௯௯௯

தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்

ரூ 0
50 காசு

-நமக்கு வந்த மடல்கள்-

○ பெரு மதிப்பிற்குரிய பொறுப்பாசிரியர் அவர்களே! வணக்கம்! தங்களின் தமிழ்த்தொண்டு வாழ்க! தங்களின் பாப் புலமை வாழ்க! பாக் குறும்பு வீழ்க! பொது வாழ்வில் பொன்முலாம் பூசப்பட்ட போலி அணிபோல் ஒளிரும் துரை-மாணிக்கம் அவர்களே! அரசியல் அறிவு வெறுமையே! உங்களுடைய ஆசிரியவுரைக் கருத்துகளை யெல்லாம் மறுத்து-மன்னிப்புக்கோரி ஒரு வேண்டுகோள் வெளியிடும். தமிழனுக்குத் தற்பொழுது இருக்கும் அரசியல் கட்சிகள் போதவில்லை என்று தாங்கள் ஒன்று தொடங்கப்போவதாகப்போலியுரை வெளியிட்டுவந்தீர்களே! அந்தக் கதை முடிந்ததா......தொடருமா? நிற்க...; பேராயக் கட்சியில், திரு. காமராசரைப் பிடிக்கும்; மற்ற கட்சிகளில் எவன் உமக்குப் பிடிக்கும்? குமுகாயத்தில், குலப்பிரிவை எதிர்த்து வந்த நீங்கள் புரட்டாசி இதழில் ஒரு புரட்டனின் பெயரோடும்-தனியாகவும் சாதிப் பெயரைக் குறிப்பிட்டு, முகத்தில் கருப்புக் கரியைப் பூசிக்கொண்டீரே! பேரறிஞர் அண்ணா அவர்களைத் திட்டியதோடு-உமது அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டீரய்யா? பார்ப்பனீயத்தை வெறுத்த அண்ணாவின் அறிவெங்கே? பார்ப்பனரை வெறுக்கும் உமது அறியாமை என்னே! பார்ப்பனீயத்தை வேருடன் கல்லியெடுக்க நீர் இந்த ஏதுமறியாத் தமிழர்களுக்கு ஏதாவது புதுவழி கண்டு சொல்லும்; நிற்க...; திமிர்பிடித்த புரட்சிப் பாவலன் பாரதிதாசனையே தமிழகத்திற்கு, ''முகில் கிழித்து வெளிவந்த முழுமதி'' என்று அறிமுகப்படுத்தி வைத்தவர் அண்ணா! அவரையே, தாக்கிப் பேசித், தான் இறக்கும் பொழுது யாரென்று தெரியாமலேயே இயற்கை எய்திய மடப்பாவலனின் வழியில் தாங்கள் போவது அவ்வளவு சரி இல்லை; உங்களைக் காணும் வாய்ப்புக் கிடைத்தால் என்னிடம் உள்ள இருபத்தெட்டு கேள்விகளுக்கு உம்மிடம் விடை கேட்பேன்; உம்முடைய ''நூருசிரிய''த்திற்குத் தலை தாழ்த்துகின்றேன்; தமிழ் நானூற்றில் வந்த பாடல்களுக்கு உம்மைக் கால்தொட்டு வணங்குகிறேன்;உம்முடைய தனித்தமிழ் நடையைத் தலைமேல் கொண்டு-உம்மை வணங்குகிறேன். உம்முடைய அரசியல் அறியாமைகண்டு மனம் வருந்துகிறேன்.

தென்மொழியின் வளர்ச்சிகண்டு பூரிக்கும் அன்பன்,
இரா. அருள்பாண்டியன். ஆசிரியர், மேட்டுப்பாளையம்,
வெள்ளைக்கோயில் வழி, கோவை மா. வ.

○ அண்ணைத் தமிழன் அருந்தவப் புதல்வரே! சுவடி 5 – ஓலை 3 இல் ஈ வெ ராவுக்குத் தாங்கள் சொல்லால் விடுத்த வேண்டுகோள், கல்லின் மீது தூவிய நல்விதைபோல்-காட்டில்பூத்த மணமலர்போல்-பாலையில் பொழிந்த எழில் நிலவு போல் பயனற்றுப் போனமையால்தான், சுவடி 9 இல் எவரும் கொடுக்காத – கொடுக்கத் துணியாத – நெஞ்செலும்பு பொடிப்பொடியாகும் வகையில் அஞ்சாமையுடன்-ஆன்ற அறிவுடன் சொல்லம்பு விட்டீர்கள். தங்களின் தூய்மைத் தமிழ்ப் பற்றிற்கும்-துணிவிற்கும்-துன்பம் கண்டு துவளாது வாய்மையுரை விடுக்கும் வன்மைக்கும் 'இற்றைத் தமிழகத்தில் ஒற்றைத் தமிழரே தாங்கள்' என எண்ணுகையில் விண்ணினும் விரிந்ததாக-மண்ணினும் மாப்பெரிதாக என் உளமகிழ்ச்சி பெருகுகிறது. போற்றுகிறேன்; பாராட்டுகிறேன். சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ் என்பதற்கேற்ப, மூளைக்குழப்பத்தால் உளறிய ஈ. வெ. இராவுக்கு மூச்சுள்ளவரை நடுங்கிப் பார்க்கும்படியானதொரு மண்டையடியை,

[தொடர்ச்சி 3ஆம் அட்டைப் பக்கம்]



தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே.

சுவடி - 5: :ஓலை - 10

நளி (கார்த்திகை) தி. பி. ௧௯௯௮ (1967-நவம்பர்)

பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

நடைபெறப்போகும் இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு



கடந்த ஆண்டு ஏப்பிரல் திங்களில் மலேசியாவில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு செயலளவில் எவ்வகையான பெரும் பயனையும் தரவில்லை என்றாலும், கருத்தளவில் தமிழ்மொழியை உலகக்கருத்தரங்கில் ஏற்றவும், அதன் தொன்மை பற்றியும், சிறப்பியல்புகள் பற்றியும் உலக மொழியியல் ஆய்வாளரிடை ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும் ஒருவகையில் பயன் பட்டது எனலாம். அம் மாநாடு செயலளவில் பயன் தராமற்போனமைக்கு முதலில் அது தமிழ்நாட்டில் நடைபெறாததும், தமிழ் மொழிக்கெனவே தம் அரும்பெரும் வாழ்வைச் செலவிட்ட தமிழக மொழியறிஞர் சிலரை

உள்ளடக்கிக் கொள்ளாமற் போனதுமே தலையாய காரணங்களாகும். இவ்விரண்டில் முதற்காரணம் தவிர்க்க முடியாததும், குற்றங்கூற முடியாததுமாகும். இரண்டாவது காரணம் தமிழக உறுப்பினர்களை அமைக்கும் பொறுப்பு தமிழ்ப்பற்றில்லா ஒருவரிடம் ஒப்படைக்கப் பட்டதால் வந்த விளையாகும். இவையன்றி நடப்புமுறையில் பல குறைகள் இருந்தன. அவற்றில் ஒரு சிலவற்றையேனும் இக்கால் நினைவுபடுத்திக்கொள்வது, இங்கு அடுத்த ஆண்டு சனவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் மாநாட்டை ஓரளவு சிறப்பாக நடத்தத் துணை புரியும் என்று கருதியே இதை எழுத விரும்பினோம்.

தமிழகத்தில் இக்கால் பதவியேற்றிருக்கும் தி. மு. க. அமைச்சரவையின் வரலாற்றில் இம்மாநாடு சிறப்பானதொரு நிகழ்ச்சியாதலின், இதனை மிகச்சிறப்பாக நடத்திவிடத்திட்டமிட்டிருப்பது, அக்கட்சிக்கும் தமிழுக்கும் பயன்தரத்தக்கதே ஆகும்; மலேசிய மாநாடு தனிப்பட்ட ஓர் அமைப்புக்குழுவால் நடத்தப்பட்டதைப்போலன்றி, இம்மாநாட்டை இக்கால் பதவியிலுள்ள அமைச்சரவையே ஏற்று நடத்தவிருப்பது, மாநாட்டைப் பெரும் பயனுடையதாகச் செய்ய நல்ல வாய்ப்பாகும் ஆனால் இதுவரை வந்துள்ள செய்திகளைப் பார்க்கின், நாம் நினைக் கின்ற அல்லது எதிர்பார்க்கின்ற அளவில் மாநாடு பயன்படுமா என்பது ஐயத்திற்குரியதே! இதை நாம் பட்டறிவு வாயிலாகவும், மாநாடு திட்டமிட்ட வகையினையும்கொண்டே கணிப்பது எளிது.

முதற்கண், மாநாட்டின் பல்துறைப் பொறுப்புகள் பெரும்பாலும் தமிழ் மொழிக்குத் தொடர்பற்ற சிலரின் கைகளிலேயே ஒப்படைக்கப் பட்டிருப்பது வருந்தத்தக்கது. நடைபெறப்போகும் மாநாடு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் வழிவகைகளைக் காணும்முறை யில் அமைக்கப்பெறாமல், தமிழர்களின் அருமை பெருமைகளை இது வரை பேசப்பட்டுவந்த வரலாற்று, நாகரீக அடிப்படையிலேயே எடுத் துக் கூறவந்த மாநாடாக அமைந்துவிடும்போல் தெரிகிறது. தமிழர் களின் வரலாற்றுச் சிறப்பும், நாகரீக மேம்பாடும் உலக அரங்கில் நிலை நாட்டப்படும்முன், தமிழ்மொழியின் தொன்மையும், வன்மையும், அகற் சியும், ஆழமும், இக்கால மொழி நூலுக்கும், ஒலிநூலுக்கும் ஒத்தவகை யில் மெய்ப்பிக்கப்பட்டு, அஃது உலகமொழியாக வழங்குவதற்கு ஏற்ற தென்பது எண்பிக்கப்படுவதே இன்றியமையாத பணியாகும். இவ் வகைக்கு ஏற்ற வகையிலல்லாது, வேறு எவ்வகையானும் ஒரு மொழி மாநாட்டின் கொள்பயனைத் தேர்ந்துவிடல் முடியாது.

மேலை நாட்டு மொழியாய்வாளரிடை ஆரிய மொழியான சமற்கிருதமே உலக மொழிகளுக்குள் தாய்மைத்தன்மை வாய்ந்ததும், தொன்மை மிக்கதும், மெய்யறிவுக் கருத்துகள் உள்ளடங்கி நிற்பதுமான ஒரு சிறந்த மொழி என்னும் தவறானதொரு கருத்து பரப்பப்பட்டு வருகிறது. எத்துறையினையும், எந்நாட்டவர் தொடர்பினையும் எளிதாகவும் வலிதாகவும் பற்றிக்கொள்ளும் ஆரியப் பார்ப்பனர்கள் உருசியா, சீனாபோன்ற பொதுவுடைமை நாடுகளில்கூட, தம் மொழிச் சொற்கள் அவ்வந்நாட்டு மொழிகளில் விரவிக்கிடப்பவாக மயங்கவுரைத்தும்,எழுதியும், ஆங்காங்குள்ள மொழி நூலாசிரியர்களைத் தமிழ் மொழியின்மீது நாட்டந் திரும்பாவாறு தடுத்தாட்கொண்டு வருகின்றனர். கடந்த மலேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரித்தானிய நாட்டின் திரவிட மொழியாராய்ச்சி அறிஞர் பர். எமினோ என்னும் மூதறிஞர்கூட சமற்கிருதம்பற்றி அம்மாநாட்டில் மயங்கவுரைசெய்த கருத்து நினைவுகூறத்தக்கது. எனவே இதுபோன்ற மொழித்துறை மாநாடுகள்வழி முதற்கண் செய்யத்தக்கது, தமிழ் மொழியின் உண்மையான செம்மாப்பினை உலக மொழியாராய்ச்சி வல்லுநர்கள் உணருமாறு செய்வதேயாகும். இவ்வடிப்படைப் பயனைக்கூட நடைபெறப்போகும் இம்மாநாடு விளைவிக்கத் தவறுமானால், இம்மாநாடு உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்று நடைபெறப் புகுவதும், அதற்கான இத்தனை ஆரவாரமான முயற்சிகளைச் செய்துகொண்டிருப்பதும் உமி குற்றிக் கைசலித்த செயலாகவே முடியும் என்பதை அரசினர்க்கு எடுத்துக்கூற விரும்புகின்றோம். இச்செயலைத் தமிழ்நிலத்து அல்லாமல் பிறநாடுகளில் நடைபெறும் மாநாடுகள் மேற்கொண்டு செய்யும் என்று எதிர்பார்ப்பது எங்ஙன்?

அடுத்தபடி, மலேசிய மாநாட்டின் நிகழ்ச்சிகள் முற்றும் ஆங்கிலத்திலேயே அமைக்கப்பட்டிருந்தமை போலன்றி, இங்கு நடைபெறவிருக்கும் மாநாட்டின் நிகழ்ச்சிகளனைத்தும் தமிழிலேயே விளங்குதல்வேண்டும். இன்றியமையாதவிடத்து, மேலைநாட்டு மொழியாய்வாளர்தம் பிறமொழிப் பேச்சுகள் ஒலிக்கப்படுமானால், அவற்றிற்குரிய தமிழ் மொழிபெயர்ப்பினை முன்கூட்டியே அச்சிட்டு வழங்குதலும் வேண்டும். தமிழக அரசு இத்துறையில் மிகுந்த விழிப்புடன் இருத்தல் வேண்டும் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றோம். இனி, மாநாட்டிற்கெனப் பத்திலக்கம் உருபா நன்கொடை திரட்டப்போவதாக அரசு அறிவித்துள்ளது. திரட்டப்பெறும் தொகை

யுடன் அந்த அளவிலோ, அதிற் பாதியளவிலோ அரசும் மாநாட்டிற் கெனத் தொகையை ஒதுக்குவதும், அவ்வாறு சேர்ந்த மொத்தத் தொகையை மிகப் பயனுள்ள வழிகளில் மட்டும் செலவிடச் செய்வதும் பாராட்டுக்குரியதாகும். தமிழ்மொழிக்கு இதுவரை சிறந்ததெனக் கொள்ளப் பெறுவதும், கருத்தாணைபெற்றது எனக் கூறத்தக்கதும், எருதந்துறைப் (OXFORD) பல்கலைக்கழகம் வெளியிட்டது போலவு மான பேரகர முதலியில்லாதது பெருங்குறையாகும். 1939-இல் தமிழ்க் கோடரி திரு. வையாபுரியார் முன்னின்று, அரசினர் பணமாகிய உருபா 4,10,100-ஐச் செலவிட்டு வெளியிட்ட பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகர முதலி எல்லாவற்றானும் சிறப்பிழந்த ஒன்றாகும். அதன் சீர் கேடுகளை விளக்கி மொழிப்பேரறிஞர் திரு. தேவநேயப்பாவாணர் அவர் கள் வெளியிட்ட ஆய்வுநூலைக் கண்டவர்களே வையாபுரியார் வெளி யிட்ட அவ்வகர முதலி தமிழுக்கும் தமிழருக்கும் எத்துணை இழிவும் இழப்பும் சேர்க்கவல்லது என்பதை நன்கு அறிவர். இதுபற்றித் தென் மொழி முன்பே விரிவாக எழுதியுள்ளது. இவ்வரும்பெரும் பணிக்கும், நாம் முதற்கண் கூறிய தமிழ்மொழியின் வல்லாண்மையையும் சொல் லாண்மையையும் மேனாட்டறிஞரும் ஒப்புக்கொண்டு உடன் போகும் வழித் தம் நுண்மாண்நுழைபுல வன்மையால் எடுத்துக்கூறும் மது கைக்கும், தம் நாற்பதாண்டுக்கால மொழியாய்வினால் ஒப்பாரும் மிக்காரும் இன்றி மொழிநூல் அரிமாவென விளங்கும் திரு. ஞா. தேவ நேயப்பாவாணர் அவர்களைப் பயன்படுத்திக்கொள்வது தக்கதாகும். இஃதிவ்வாறிருக்க மொழியின் பெயரால் நடைபெறும் இம்மாநாட்டில் அம்மொழி மூதறிஞர் தகுதி வாய்ந்த ஒரு பொறுப்பில் அமர்த்தப் படாமை, இம்மாநாட்டு அமைப்பாளர்க்குப் பேரிழுக்கும் தமிழர்க்குப் பேரிழப்புமாகும் என்பதை மிகுந்தவருத்தத்துடனும் அழுத்தத்துடனும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அவரினும் தகுதிவாய்ந்தார் ஈண்டுக் காணப்பெறுவதும், இனிக் காணப் பெறுவதும் அரிதினும் அரிது என்பதை அரசினர் ஓர்க.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும். — என்பதும்,

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். — என்னும்

குறளுரையும் அரசினர்க்குத் தெரியாதன அல்ல.

அடுத்து, தமிழ்ச்சார்பில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டிற்குத் தமிழ் வளர்க்கும் தாளிகைகளும், தமிழ் மன்றங்களும் அழைக்கப் படாமை பெருங் குறையாகும். நாளும் தமிழ்ப்பேணும் அத்தாளிகை களும் மன்றங்களும் அன்றித் தமிழர்க்கு உண்மையான மொழியறிவு காட்டுவதும், இனவுணர்வை எழுப்புவதும் எவ்வாறு கைகூடும் என் பதை எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். தாளிகைகள் சார்பில் பார் வையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனரே என்றோ, அழைக்கப்பட விருக் கின்றனர் என்றோ அரசினர்கள் கூறுவார்களாயின், அவர்கள் அழைத்த, அல்லது அழைக்கவிருக்கின்ற தாளிகைகளின் தரம், திறம், அவை தமிழுக்குச் செய்துவரும் தொண்டு முதலியன கவனிக்கப் பட்டனவா, அன்றிக் கவனிக்கப்பட விருக்கின்றனவா என்பதுபற்றி யும்அரசினர் கருத்துக்கொள்வாராக.

மேலும், தொகுக்கப்படும் கொடைப் பொருளில் சென்னையில் நிலையான ஒரு தமிழ் மன்றமும், தமிழ் நூல் வெளியீட்டுக் கழகமும் அமைத்து, அவற்றைச் சிறந்த தமிழறிஞர் குழுவொன்றிடம் ஒப்பு வித்து, ஆண்டுதோறும் வெளியிடப் பெறும் சிறந்த இலக்கிய, இலக் கண, அறிவியல், குமுகாயவியல் நூல்களுள் சிறந்த ஒவ்வொன்றினுக் கும் ஒரு பெருந் தொகையினைப் பரிசாக அமைப்பதும், அப்பரிசு பெற்ற நூல்களை அக்குழுவினரே அச்சிட்டு வெளிப்படுத்த, அவற்றின் பெரும்பகுதியை அரசினரே வாங்கிப் பொது நூலகங்களில் வைக்கச் செய்வதும் இம்மாநாட்டில் செய்யப்படவேண்டிய இன்றியமையாத பணியாகும். இவையன்றி, நடைபெறப்போகும் ஆராய்ச்சி மாநாட் டினை ஓர் அரசியல் மாநாடு அல்லது கலைக்காட்சி போல நடத்தி ஆர வாரப்படுத்த விருப்பது அரசினரின் தமிழ் வளர்ச்சிக் கொள்கையையும் கைகளையும் களங்கமும் கறையும் படுத்திவிடும் என்று எச்சரிக்கின் றோம். இத்துடன் இன்னொன்றையும் கூற விரும்புகின்றோம். அமைக்கவிருக்கின்ற மாநாட்டு நிகழ்ச்சிகளில், 5 வெள்ளித் தேர்களில் ஐம்பெரும் பாவியங்களையும் வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வ தாகவும், முகப்படாம் வைத்துப் புனைவு செய்யப் பெற்ற யானை மேலும் இரண்டு குதிரைகள் மேலும் தமிழ் நூல்களை வைத்து எடுத்துச் செல்ல இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது வெறும் ஆரவாரச் செயலும் தேவையில்லாதனவுமாகும். யானையும் குதிரையும் வட்டரங் குக் காட்சிகளினின்று எளிதே கூலிக்குக் கிடைப்பனவாகும். இவை மேல் வைக்கப்பெற்று ஊர்வலம் வரின், அத்தமிழ் நூல்களுக்கும்,

பாவியங்களுக்கும் வரும் பெருமையோ சிறப்போ என்னவாக இருக்க முடியும்? நூறு அல்லது இரு நூறு உருபாச் செலவில் வருவிக்கப் பெறும் அவ்விலங்குகள் அவற்றைத் தூக்குவதால்தான் மாநாடு சிறப் புறுமோ? உண்மைப் பயன் விளைவிக்கக் கருதிக் கூட்டும் மாநாடு களில் நடைபெறும் இத்தகைய நிகழ்ச்சிகள், வெறும் வட்டரங்குக் (CIRCUS) காட்சிகளில் வரும் காசடி வேலைகள் போலாது வேறு என்ன பயன் நல்கும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனரோ நாமறி யோம். வேண்டுமாயின், அப் பாவியங்களையும், நூல்களையும் முத லமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தம்தம் தலைக ளின் மேல் ஏற்றிக்கொண்டு அவ்வூர்வலத்தில் வருவார்களாயின், இந் நிகழ்ச்சி, நம் பண்டைய நூல்கள் எத்துணையளவு பெருமைப்படத்தக் கன என்பதையும், அவற்றை நாம் எவ்வாறு போற்றி வருகின்றோம் என்பதையும் மேனாட்டினர் உணர்ந்து வியப்புற வழியாகும். இவை போன்ற வட்டரங்கு மூலைத்தெரு வேலைகள் அறவே அகற்றற் பாலன வாகும். இதுபோன்றதே படிவ (சிலை) அமைப்பு வேலையும். நம் நாட்டில் உள்ள எத்தனையோ படிவங்கள் சீந்துவாரற்றுத் தெருவோர வாணி கர்க்கு நிழல் மரமாகவும், பறவைகள் தம் எச்சங்களுக்கு இடுமேடாக வும் அமைந்திருப்பதைக் கண்ணாரக் கண்டிருக்கின்றோம். அரிதாகத் திரட்டும் பெரும் பொருளை இப்படிக் கல்லாகவும் காட்சியாகவும் செய் விப்பது தமிழ் வளர்ப்பதாகாது என்பது நம் துணிந்த கொள்கை. தமிழால் வறுமையுற்று நூல் பல ஆக்க வழியின்றிக் கிடக்கும் பாவாணர் போலியருக்குத் தந்து மொழிக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்காத நாம், அரிதிற் கிடைக்கும் இவ்வரும் பொருளைத் தக்க வழி யில் செலவிடுவதே அறிவுடைமையாகும் என்று மீண்டும் கூறிக்கொள் கின்றோம். முடிவாக, மாநாட்டின் பிற விளைவுகள் குறித்துப் பின்னர் விரிவாக எழுதுவோமாகையால், தமிழக அரசினர் எவ்வகைக் குறைக் கும் இடம் வையாது, தாம் அரிதின் மேற்கொண்ட இவ்வரும் பணி யைப் பெரிதும் சிறப்புற முடித்து முடிவிலாப் பெரும்புகழ் எய்துவார்க ளாக.

—பெருஞ்சித்திரன்.

'தென்மொழி'

காலந் தாழ்ந்துவரக் காரணம் என்ன?

'தென்மொழி' எனக்காக வன்று. 'தென்மொழிக்காக நான். தென்மொழிக்கே என் மூச்சு, பேச்சு, நடக்கை, செயல் எல்லாவற்றை யும் அடிப்படுத்திவிட்டேன். என் மனைவி, மக்கள் இவர்கள் என்னைக்

காக்க இருப்பதாகவே நான் கருதுகின்றேன். நான் அவர்களைக் காப்பதாக என்றும் கருதியதில்லை. என் பிள்ளைகள் என்ன படிக்கின்றார்கள்? என் மனைவி என்ன விரும்புகின்றாள் என்பதைவிட 'என் தமிழர் எப்படி வாழ்கின்றனர்? எப்படி வீழ இருக்கின்றனர்? தமிழ் எப்படிப் புறக்கணிக்கப்படுகின்றது? எப்படி உயர்த்தப்பட வேண்டியது? என்பவற்றில் எனக்கு நாட்டம் மிகுதி. காலை நான்கு மணிமுதல் நள்ளிரவு பன்னிரண்டுவரை என் கை, கால், கண், உடல், மனம், உயிர்—எல்லாம் தென்மொழிக்காகவே வேலை செய்கின்றன; இயங்குகின்றன. காரணம் தென்மொழி ஒன்றால்தான் தமிழர்க்கு ஏதாவதொரு விடிவைத் தேடித்தர இயலும் எனத் துடிக்கின்றேன். வழியைக் காட்டிவிடக் குமுறுகின்றேன். முடியுமா? முடியாதா? என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில் அஃது என்னைப் பொறுத்தது மட்டுமன்று. இம்மக்களைப் பொறுத்ததுமான செய்தி. வள்ளுவர் காணத்துடித்த உலகம், சாக்கிரடீசு காண விழைந்த மக்கள், பிளேட்டோ அமைக்க விருந்த அரசு, புத்தர் சமைக்க விரும்பிய அருள்...? இவையெல்லாம் வெற்றி பெற்றனவா? இல்லை? அவர்கள் கைகளில் தூக்கியிருந்த பொருள்களை—கொள்கைகளை வாங்கி வீசியெறிந்துவிட்டு, அவர்களை தங்கள் தோள்களில் தூக்கிக்கொண்டு கூத்தாடினர் மக்கள். அவர்கள் கொள்கைகள் தோற்றன. அவர்கள் வெற்றிபெற்றவர்களாக அறிவிக்கப் பெற்றனர். இவ்வுலகம் கொள்கைக்காக இயங்கவில்லை; மக்களுக்காகத் தான் இயங்கும் என்பதே முடிந்த முடிபாக இருக்குமானால் நானும் என் கொள்கையின் வெற்றி தோல்விகளைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஏனென்றால் மக்களிடையில் தோற்றுப்போவது என் வரையில் வெற்றி பெறுவதே! இந்நிலையில் முற்றும் தனியனாக-தன்னந்தனியவனாக நான் நடைபோடத் தொடங்கி விட்டேன். என் பின்னர் வருப்வர் யார்? என் பக்கவாட்டில் நடப்பவர் யார்? என்றெல்லாம் நான் பார்க்க விரும்பவில்லை. தமிழர்க்கென்று ஓர் ஒளிப்பாதை உளதாக என் விழி நரம்புகள் உணர்கின்றன; அறிவுத் திசுக்கள் ஆர்ப்பரிக்கின்றன. என் மனத் திரையில் அப்பாதை தெளிவாகப்படுகின்றது. பன்னூறாண்டுக்காலம் மங்கிக்கிடந்த ஒன்று எனக்குப்புலப்படுவதாக நான் உணர்கின்றேன். நான் அதை நோக்கி நடக்கவேண்டும் என்று இறைவன் ஆணையிடுவதாக என் உயிர் எனக்குப்புலப்படுத்துகின்றது. என் புலம்பன் எனக்குத் துணை வருகின்றதாக என் மனச்செவிக்கு உரைக்கின்றது. இறைவன் திருக்கை நான் போகின்ற பாதையைநோக்கிச் சுட்டியிருப்பதாக எனக்குப்படுகின்றது. எனவெ துணிந்து நடைபோடத் தொடங்கி விட்டேன்.

நான் எதையும் இவ்வுலகில் விரும்பவில்லை. தமிழ் ஒன்றே என் உணர்வு; உயிர்; மூச்சு; வாழ்க்கை. அதில் இவ்வுலக மலர்ச்சிக்கே வழியிருப்பதாக எனக்குப் படுகின்றது. தமிழர்க்குமட்டும் வழியிருக்காதா? பொருளை நான நாடவில்லை; துணையை நான் கைநீட்டி அழைக்க விரும்பவில்லை. அதற்கு நேரமும் இல்லை. ஓயாமல் உழைக்கின்றேன். உடல் வாளாதபோது உளத்தால், உணர்வால், அறிவால் ஆயிரங்கோடிச் சுரங்கங்கள் வெட்டுகின்றேன். அவற்றின் ஒளிக்கட்டிகளை உங்கள் முன்னர் வாரியிறைக்க விரும்புகிறேன். நீங்கள் அவற்றைப் பொறுக்கிக்கொள்ளாது, காலால் மிதித்து இழிவு செய்வதும் என்னைத் துன்புறுத்தாது.

தென்மொழி நான் விடும் துயரமூச்சு! அதற்குப்போதிய துணையில்லை; பொருள் வலியில்லை. நான் சாய்ந்தால் அது சாயும் என்று எனக்குத் தெரியும். பெரியவர்கள் என்று கருதி ஓரிருவரை அண்டித் துணைநிற்க வேண்டினேன். கூப்பிய கையை அவர்கள் விரித்துக் காட்டினர். எனவே' அவர்களையும் இனி எதிர்பார்ப்பதில் பயனில்லை.

ஆனால் தென்மொழி கட்டாயம் தொடர்ந்து வரும்; வந்துகொண்டிருக்கும். காலத்தாழ்த்தம் ஏற்படலாம். இருந்தாலும் வரும் அரசினர் நூலகங்களுக்குப் போய்க்கொண்டிருந்த தென்மொழி இம்மாதத்தோடு நிறுத்தப்பட்டது. ஏனெனில் அரசினர்க்கு இது தேவையில்லை. அவர்களுக்கு வேண்டியது வேறு.

அச்சகம் மாற்றப்பட்டது. மின்சாரத்திற்கு அரசாணை கிடைக்கவில்லை. அதிகாரிகளின் புறக்கணிப்பு. தொழிலாளர்களின் ஒழுங்கின்மை; கரவுத்தனம்; ஒன்று இருந்தால் ஒன்றில்லை. காரணம் இவற்றில் நான் நாட்டம் கொள்ளவில்லை. வாணிகம நான் விரும்பாத ஒன்று! பொய்யுரை நான் உரையாத ஒன்று! போலி நடிப்பு என் உடல் சிலிர்சிலிர்க்கும்படி நான் அருவருப்படைவது. கூனிக் குறுகித் தோளைத் தாழ்த்துவது என்னால் முடியாது. தமிழ் என்னை நிமிர்த்திக் கொண்டுள்ளது. இந்நிலையில் நான் எப்படி வெற்றிபெறமுடியும்? தோற்பேன் என்று எனக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் தென்மொழி கட்டாயம் வெல்லும். சிப்பியைத் தூக்கித்தான எறிவர்; முத்தை எடுத்துப் பேணுவர் என்பதை நான் நனகு அறிவேன். காலம் என கருத்துகளை நிலைநிறுத்தும். என் உயிரணு உள்ளவரை தமிழுக்கு நான்! தமிழால் நான் இல்லை. எனக்குத் தமிழன்னையே துணை

—பெருஞ்சித்திரன்.

திருத்திப் படிக்க.

இவ்விதழின் 57-ஆம் பக்கத்தை 61-ஆம் பக்கமாகவும், 61-ஆம் பக்கத்தை 57-ஆம் பக்கமாகவும் திருத்திப் படிக்க வேண்டிக் கொள்கின்றோம். பலவகை இடர்ப்பாடு காரணமாக நேர்ந்த இப்பிழையை அன்பர்கள் பொறுப்பார்களாக. -(ஆ-ர)

இலக்கியம்

நூருசிரியம்

துரை-மாணிக்கம்

பாட்டு: அ.

வலிதே காலம்; வியப்பல் யாமே!
முலைமுகம் பதிய மாந்திப் பாஅல்
ஒழுக வாய்வாங்கி "ஊ,ஆய்" எனவுமிழ்ந்து
தந்தை கழிநகை பெறக்காட்டி, யிழிந்து
குறுநடந்தும் ஓடியும் முதுகிவர்ந் தோச்சியும்
நெருநல் ஓவத்து நினைவழி யாமே,
பார்த்தமேனி படர நடைநெற்றி
ஆடு சிறுகால் அதைந்துர மேற
மெலிந்த புன்மார்பு பொலிந்து வலியக்
குரல்புலர்ந்தே அணல்தாவ
உளைபொதிந்து கழுத்தடர
வளைமாதர் மனமிதிப்பத்
திமிர்ந்தெழுந்து நின்ருற்குப்
பணைந்தெழுந்த இணைநகிலம்
குறுநுசுப்புப் பேரல்குல்
வாஃலெயிற்றுக் கழைதோளி
முனையொருநாள் வரைக்கொண்டு
மனைதனி வைக்கயெஞ் சிறுமகன் தானும்
பெறல்தந்த பெருமகன் உவக்காண்,
திறல்நந்த யாங்கிவன் தேடிக் கொண்டதே!

பாட்டு:அ

பொழிப்பு: வலிவுடையது காலம்; வியப்புறுவேம் யாம்! தாயிடத்து பாலையின் மிசை, குழவியின முகம் முற்றும் பதியும்படி பாலை வயிறு முட்ட அருந்தி, அஃது ஒழுகிக் கொண்டிருக்கும்படி தன் வாயை மீட்டு வெளியெடுத்து, 'ஊ''ஆய்' என உமிழ்ந்து, தன் தந்தை பெருநகை செய்யுமாறு காட்டி, எம மடியினின்று இறங்கிக் குறுகிய அடிகள் சார்ந்த நடையிட்டும, சில பொழுது ஓடியும், சிலகால் தன தந்தையின் முதுகின் மிசை யேறி அவரைக் குதிரையாக எண்ணி ஒச்சியும் நின்ற, நேற்றைப பொழுதின் ஓவியமெனப் பதிந்த எம் நினைவுகள் அழியாமல் நிற்கவும, யாம் பார்த்து மகிழ்வுற்ற மேனி படர்ந்து பொலியவும், நடைதடுமாறி ஆடி நின்ற சிறிய கால்கள் விம்மிப் புடைத்து உரமேறி நிற்கவும், மெலிந்து நின்ற சிறிய மார்பு அழகுபெற, வலிவுபெற்று நிற்பவும, குரல் தடிப்பவும், முகவாயினும் தாடையினும் அடர்ந்த மீசையும் தாடியும் தாவி நிற்பவும், தலைமயிர் அடர்ந்து வளர்ந்து கழுத்தை அளாவி நிற்பவும், உடல் கட்டு மிகுந்து வளர்ச்சியுற்று நிற்கவும் செய்தானுக்குப், பருத்து விம்மி இணைந்து நின்ற முலைகளும், குறுகி யொடுங்கிய இடையும், அகன்ற இடைக் கீழ்க் கடிதடமும், வெள்ளிய எயிறும், மூங்கில் போன்ற தோள்களும் கொண்டாள் ஒருத்தியை, முன்னைய ஒரு நாள் மணங்கொண்டு, தனி மனையில் வதியுமபடி வைக்க, எஞ்சிறுமகனாகிய அவழ் தானும் பெற்றுத் தந்த பெருமை பொருந்திய தன் மகனை உதோ ,இவண காண்! தனக்குற்ற திறமை நிறையும்படி இவன் அவ்வாற்றலைத தேடிக் கொண்டது யாங்ஙன்?

விரிப்பு:

இப்பாடல்அகத்துறையைச் சார்ந்தது.

தன் மகனின் குழவிப் பருவத்தையும், அவன் விரைந்து வளர்ந்து இளைஞனாகி மணம் புரிந்து, ஈண்டொரு மகனுக்குத் தந்தையாகி நின்ற காலத்தையும் கண்ட தாய் ஒருத்தி, அவன் இத்திறம் பெற்றது எங்ஙனே என வியந்து கூறியதாக அமைந்ததிப் பாட்டு.

இவனை விரைந்து இம்மாற்றத்திற்குரியனாக்கிய காலம் எத்துணை வலிமையுடையது எனக் கூறுவான் வேண்டி, வலிதே காலம் என்றாள். வலிது-வன்மையுடையது. குழவியை இளவோனாக வும், இளவோனை முதுவோனாகவும் முதுவோனை மூப்போனாகவும் செய்கின்ற ஆற்றல் பொருந்தியது

காலம். இனிக், குழவியைக் குமரனுக்கி, ஒரு குழவிக்கும் தந்தை யாக்கிய காலம், தன்னையும் கிழவியாக்கியதைத் தாய் தன் மகன் வழிக் காண்பாளாயினுள். எனினும் 'தன்கண்என்றும் தனக்கிளமை' என்ற படி, தன் மாற்றத்தை வியவாது தன் மகனின் மாற்றத்தைக் கண்டு வியந்தாள் என்க.

வியப்பல் யாமே என்றது, தன் கணவனையும் உள்ளடக்கிய கூற்று. கணவனினும் தானே அவனை ஊட்டியும் தூக்கியும், உடுத்தும், உறங்குவித்தும், பல்வகையிற் சீர் ஆட்டியும், அணுகியும் மகனைக் கண்டவளாகையால், தாய் தன் மகன் வளர்ச்சியைக் காலம் செய்த மாற்றம் என்றும், அது வியத்தற்குரியது என்றும், கூறுவதற்கு மிகவும் உரிமையோளானுள்.

இனி, தன் மகன் குழவிப் பருவத்திலிருந்து மணம் செய்விக்கும் வரை, தாய் அவனிடத்துப் பல்வகை மாற்றங்களையும் படிப்படியாகக் கண்டாளேனும், அம்மாற்றங்கள் யாவும் அவனை அவளுக்கு இளவோனுகவே காட்டியமையால், அவள் அக்காலத்தை அன்றன்று வியவாமல், ஈண்டு அவன் பிறிதோர் உயிரைப் படைத்தற்குரிய திறம் பெற்ற அளவிலேயே அவனை முழு ஆடவனுகச் செய்த காலத்தையே மிகவும் வியந்தாள் என்க.

இனி, தன் மகன் பெற்ற பிள்ளையைக் கண்ட அளவிலேயே தாய், அவனைத் தான் பிள்ளையாகப் பெற்றெடுத்த பொழுதையும், அப்பிள்ளை வளர்ந்து வந்த நிலையினையும் நினைவு கூர்ந்து இதனை உரைப்பாளாயினள் என்க.

தன் மகன் குழவிக் காலத்தை நினைவு கூர்வாள், முதற்கண் அவன் தன்னிடத்துப் பாலருந்திய காட்சியையே தன் அகக் கண் வழிக் கண்டாளாகையால், அதனையே தலையெடுத்துக் கூறுவாள் 'முலை முகம் பதிய மாந்தி' என்றுள். தன் முலையின் மிசை குழவியின் முகம் முற்றும் பதியும்படி பால் மாந்திய அக்காட்சி அவள் மறவாத பசுமைக் காட்சியன்றே.

மாந்துதல்-வேட்கை தீர அருந்துதல்-வயிறு முட்ட அருந்துதல். அவ்வாறு அருந்தியமையால், அக்குழவி பாலை 'ஆய்'என உமிழ்ந்தது என்க.

பாஅல் ஒழுக வாய் வாங்கி-குடித்த கடைசி வாய்ப் பாலை விழுங்காது அது கடைவாயில் ஒழுகிக் கொண்டிருக்கும்படி தன் வாயை முலைக்

காப்பினின்று எடுத்து.

இனி, மூலை சுரக்கப் பால் குடித்த குழவி தாயின் முலைக்காம் பினின்று பால் தானே ஒழுகும்படி தன்வாயினை எடுத்துக்கொண்டது என்றும் கொள்க.

ஊ, ஆய் என உமிழ்ந்து 'ஊ' இழிவுக் குறிப்பும் 'ஆய்' அருந்தற் காகாத இழிபொருள் இடக்கரடக்கலாகக் கூறப்படுவதும். குழவியின் மழலை மொழி, வயிறு நிரம்பும் வரை பாலாக விருந்து 'நிரப்பிய பின் 'ஆய்' என இறுதி வாய்ப் பாலை உமிழ்ந்து காட்டியது என்க.

தந்தை கழிநகை பெறக் காட்டியது: அமிழ்தாகிய பாலை வயிறு புடைக்க மாந்தியதும் 'ஊ' 'ஆய்' எனக் குழந்தை உமிழ்ந்து காட்டத் தந்தை உவகையால் மிகச் சிரித்தார் என்றபடி. தந்தை பெரிதாக நகைக்கும்படி 'ஊ ஆய் என உமிழ்ந்து காட்டி என்று கூட்டுக.

இழிந்து–இறங்கி- மடியின்மேலமர்ந்து பாலருந்திய பின் ஊ ஆய் என உமிழ்ந்து தாயின் மடிவிட்டு இறங்கி என்றபடி.

குறுநடந்தும் ஓடியும் முதுகு இவர்ந்து ஓச்சியும் – இறங்கிய குழந்தை குறுகுறுவென நடந்ததும், பின் ஓடுதல் செய்ததும், தன் தந்தையின் முதுகின் மேல் ஏறி அவனைக் குதிரையாக எண்ணி ஒட்டுதல் செய்ததும் குழவி பாலருந்துங் காலத்துத் தந்தை அருகிருந் ததும், அவனிடம் பாலை உமிழ்ந்து காட்டி அவனைக் குதிரை இவர்ந் ததும் இவள் உள்ளத்து ஓவியமாகப் பதிந்து நினைவில் நிற்கின்ற வாகையால், நெருநல் ஒவத்து நினைவு என்றாள். நெருநல்—முன்நாள். நேற்று. இக்காட்சி நெடுங்காலத்திற்கு முந்தியதாயினினும் நேற்று நடந்ததுபோல் அவள் உள்ளத்து அழியாமல் நின்றது என்றபடி.

அழியாமே—அழியாமல் நிற்க.

பார்த்த மேனி படர—தான் பார்த்துக் கொண்டிருக்கவே மேனி படர்ந்து நிற்க. படர்தல்—பரந்து வளர்தல்.

நடை நெற்றி ஆடு சிறு கால் அதைந்து உரமேற—நடையனாது தள்ளாடும்படி ஆடி அசைந்த அக்குழவியின் சிறிய கால்கள் பருத்து வலிமை மிகுந்தது என்றபடி.

நெற்றுதல்—நடை தவறுதல். அதைத்தல்—பருத்தல்.

மெலிந்த புன்மார்பு பொலிந்து வலிய—மெலிவான் இளமார்பகம் அழகு பெற்று வலிவெய்த.

குரல் புலர்ந்து-சிறு பருவத்திலிருந்த மென்குரல், தடிப்பேறி வலிவு பெற்றது என்றபடி. புலர்தல்— அவிழ்தல், மலர்தல், சட்டு நீங்குதல்.

அணல் தாவல்-முகத்துக் கண் குறுமயிர் அரும்பி, தாடியும் மீசையும் அடர்ந்து வளர்தல்.

உளை-ஆண் தலைமயிர்-பிடரி மயிர். பொதிதல்-நிறைந்து விளங்குதல்,

கழுத்து அடர-பின் கழுத்துப் பகுதியை அளாவி நிற்ப.

மேனி பரந்து வளர்தலும், தள்ளாடிக் கொண்டிருந்த கால்கள் பருத்து, வலிந்து உரம் பெறுதலும், மென்மையான மார்பகம் அழகு பெறும்படி வன்மையுறுதலும், மென் குரல் கட்டு நீங்கி உடைந்து பெருமித முறுதலும், முகத்துக்கண் குறுமயிர் திரளுதலும், தலைமயிர் அடர்ந்து பெருகிப் பின் கழுத்தை அளாவி நிற்றலும் ஆண் மகன் பருவ முறுதலுக்கான அறிகுறிகளாகையால், தாய் இம் மாறுதல் களைத் தன் மகனிடத்தில் படிப்படியாகக் கண்டு, தன் மகனை இவ்வளவு மாற்றத்திற்கும் உள்ளடக்கிய காலத்தை வலிது என்று வியந்தனள் என்றபடி.

முலை முகம் பதியப் பாலருந்திய குழவியை இளையோனாக்கிய காலம் அவன் பால் இன்னும் சில மாற்றங்களையும் செய்யக் கருவி யாக விருந்ததை அவள் மேலும் கூறுவாள். தன் மகன் முழு அள வில் இளையோனாகிய பின், அவன் தோற்றம், காதல் மணம் கொண்ட கன்னியர் தம் நெஞ்சங்களை மிதித்துத் துன்புறுத்துப்படி இருந்தது என்றும் கண்டாள் எனவே வளைமாதர் மனம்மிதிப்பத் திமிர்ந்து எழுந்து நின்றான் என்றாள். வளையல்கள் அணிந்த காதன் மிக்கக் கழியிளமைக் கன்னியரின் மனநினைவுகளை யெல்லாம் மிதித்துத் துயர்தரும்படி, உடல் பருவத்திரட்சியுற்று எழுந்து நின்றான் என்றபடி.

மாதர்-காதல் உள்ளம் கொண்ட இளம் பெண்டிர்.

மாதர் காதல்-(தொல்-உரி-30) [இது தூய தனித்தமிழ்ச் சொல். இதனை 'மாதா' எனும் வட சொல்லினின்று வந்ததென அறியார் கூறுவர். 'மாதா' எனும் வட சொற்குத் 'தாய்' என்பது பொருள். ஆனால் தமிழில் 'மாதர்' என்ற சொல் அழகு, இளமை, காதல் என்று பொருள் பெற்று, அவ்வழகும், இளமையும், காதலும் உடைய பருவப் பெண்டிரை மட்டுமே குறிக்கும் உயர்தனிச் சொல். தமிழ்மொழிச் செழுமையும், வளப்பமும், ஆற்றலும் அறியாப் பேதையோர் சிலர்

ஆரியப் போலிப் பொய்யுரைக்கு அடிதாங்கி இழிவழக்காடுதற்குத் தமிழ் மக்கள் விழிப்புற்றிருக்க. மூது பெண்டிர் பழந் தமிழ் நூல் வழக்கில் மாதர் என்ற பெயரால் குறிக்கப் படுவதிலா. ஒலி நூலும், சொன்னூலும், மொழி நூலும் அறியா வல்லடி வழக்கார் சிலர்தம் சொல்லாடல் களுக்குத் தமிழர் செவி மயங்காதிருக்க.)

மனமிதித்தல்—பிறநினைவழித்துத் தன் நினைவழுத்தித் துன் புறுத்தல். இளையோனகை வளர்ந்து காதன் மாதர் தம் மனங்களைத் துன்புறுத்தி நின்றானுக்கு மணம் செய்வித்த நிகழ்ச்சியை இனிக் கூறுவொன் தொடங்கினள் என்க.

பணைந்தெழுந்த இணை நகிலம்-புடைத்து விம்மி நெருங்கி வளர்ந்த கொங்கைகள்.

குறு நுசுப்பு—ஒடுங்கிய இடை.

வால் எயிறு—வெண்மையும், கூர்மையும் கொண்ட பல் வரிசை.

கழை தோளி—மூங்கில் கழை போன்ற பசுமையும் இளமையும் ஒளியும் பொருந்திய தோளையுடைய பெண்.

முனையொரு நாள்—முன்னொரு நாள்.

வரைக் கொண்டு-மணங் கொண்டு. வரைதல்—மணத்தல், வரை எனுஞ் சொல் நெறி எனும் பொருள் பட்டு, உலக நெறியாகிய திருமணத்தைக் குறிக்கும.

மனை தனி வைக்க—தனி மனையில் வாழும்படி செய்ய.

இளைஞனாகி நின்ற தன் மகனுக்கு அழகும், இளமையும், தகுதியும் சான்ற இளம் பெண் ஒருத்தியை மணங் கொண்டு, அவரிரு வரையும் தனி மனையில் வைக்க என்ற படி.

எம் சிறுமகன்-எம்முடைய சிறியோனாகிய மகன். பெற்ற தாய்க்குத் தம்மகன்என்றும் இளையோனாகவே படுவானாகையால் சிறு மகன் என்றாள்.

பிள்ளையைப் பெறுவிக்காப் பருவம் வாய்ந்தோன் என்று தான் கருதியிருப்ப, அவன் தானும் ஒரு பிள்ளையைப் பெறுவித்துக் கொண டானே என்ற வியப்புத் தோன்ற அவனைச் சிறுமகன என்றாள்.

இனி, மணஞ் செய்வித்த மறு ஆண்டே அவன் பிள்ளை பெறுவித்த காதன் மேம்பாடும் இளமைக் குறும்பும் தோன்றும்படி அவனைச் சிறுமை பொருந்தியவன் என்று குறிக்க வேண்டிச் சிறுமகன் என்றும கூறினாள் என்க.

சிறுமை-சிறு பருவத்திற்கியல்பாய துடுக்குத் தன்மை.

பெறல் தந்த பெருமகன்—பெற்றுத் தந்த பெருமை பொருந்திய மகன். தன் மகன் தனக்குச் சிறுமகனுகவும் அவன் பெறுவித்த மகன் பெருமகனுகவும் படுவதில், தாய் கொண்ட தாய்மையன்பிற்கும் பெருமிதத்திற்கும் இயைபு கண்டு மகிழ்க.

உவக் காண்-உதோ காண். இடைமைச் சுட்டு. “ இவன் மூலை முகம் பதிய,என்னிடத்துப்பாலை மாந்தியதும் பாலை, 'ஊ ,ஆய்' என உமிழ்ந்து இவன் தந்தைக்குப் பெருநகை விளைவித்ததும், குறு நடை யிட்டு நடந்ததும், கால் நெற்ற ஓடியதும், தந்தை முதுகில் ஏறியிவர்ந்து குதிரை ஓச்சியதும் எம் நினைவில் ஓவியமாகி இன்றும் பசுமையாகி நிற்கின்றன காண்; அத்தகைய குழவிப் பருவம் முதிர்ந்து இவன் உடல் மேனி படர்ந்ததும், கால் அதைந்து உர மேறியதும், மெலிந்த மார்பு பொலிந்து வலிந்ததும், குரல் புலர்ந் ததும், முகத்தே குறுமயிர் கிளர்ந்து தாவியதும், தலைமயிர் கழுத் தடர வளர்ந்ததும் ஆகிய தோற்றத்தால் கன்னி மாதர் தம் மனம் வருந்துப்படி செய்ததும், அதனல் இவனுக்குப் பணை நகிலும், சிற்றி டையும், பேரல்குலும் முகை முறுவலும், கழை தோளும் சான்ற இளமை நலமிக்காள் ஒருத்தியை மணம் புரிவித்து, அவளொடு தனி மனை கிடத்த, இவனிது காண், பெற்றுத் தந்த பெருமகனை" என்று தாய் தன் அயலாள் ஒருத்தியிடம் உவந்து கூறி இவன் தந்தை "ஆகிய பெருமை தாளாது," இவன் இத்தகைய திறமையை யாண்டுத் தேடிப் பெற்ருன்" என்றும், இவனை இத்திறத்துக் குள்ளாக்கிய காலம் மிக வலியது; எம்மை வியப்புறும்படி வைத்தது" என்றும் கூறினுள் என்றபடி.

திறல் நந்துதல்–திறமை மிகுதல், நிறைதல்.

யாங்கு இவன் தேடிக் கொண்டது-இவன் இத்திறமை வளர்ந்து மிகும்படி இவ்விடைக் காலத்து, இதனை யாண்டுத் தேடிக் கொண் டான் என்றபடி.

முலைமுகம் பதிய...தேடிக் கொண்டதே என்று கொண்டும், பின் வலிதே காலம் வியப்பல் யாமே என்று கூட்டியும் பொருள்காண்க.

இது தாயொருத்தித் தன் தாய்மையுளத்தால் தன் மகன் பெற்ற பிள்ளையைக் கண்டு மகிழ்ந்து கூறிக் காலத்தை வியந்தது.

இ:.து, இல்லிருந்து மனையறம் பூண்ட தன் மகன் திறமுரைத்த தாகலின் முல்லையென் திணையும், கிளந்த தமர்வயின் நற்ருய் கிளத்தல் என் துறையுமாம்.

(வளரும்.)

சிதம்பர நாதனார் மறைவு.

மதுரை தியாகராயர் கல்லூரித் தலைவரும், நல்ல தமிழறிஞருமான பண்டாரகர் அ. சிதம்பர நாதனார் அண்மையில் மறைந்தது குறித்து மிகவும் வருந்துகின்றோம். பண்டாரகர் அவர்கள் 'தென்மொழியின்' தொடக்கக் காலத்திலிருந்தே அதன் மேல் பற்றும், அதன் வளர்ச்சியில் அக்கறையும் கொண்டவர்கள். அக்கால் தென்மொழியோடு நெருக்கமான தொடர்பும் கொண்டிருந்து. அதில் பல கட்டுரைகளையும் கருத்துகளையும் எழுதியிருக்கின்றார். இவையன்றி அவர் எழுதிய நூல்கள் எல்லாவற்றுள்ளும், அவர் தலைமைத் தொகுப்பாளராக விருந்து தொகுத்து வெளியிட்ட "பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ் அகர முதலி"யே தலை சிறந்ததாக அவர் புகழ் சாற்றி நிற்கும் தகைமை சான்றது. கூடிய மட்டில் அவ்வகர முதலி சிறப்புடையதாக வெளிவர பண்டாரகர் அவர்கள் பல்லாற்றானும் முயற்சி செய்துள்ளார்கள். அவற்றுள் ஒன்று, அதில் வெளியிடப் பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் வெறும் விளக்கப் பொருள் தரும் கலப்புச் சொற்களாக இல்லாமல் பெரும்பாலும் தூய தனித் தமிழ்ச் சொற்களாக இருக்கும்படி அமைத்திருப்பதுதான். இம்முயற்சிக்கு முன் பல்கலைக் கழக வெளியீடாகத் தமிழ்க்கோடரிக்காம்பர் திரு. வையாபுரியார் பொறுப்பிருந்து வெளியிடப்பெற்ற பல்கலைக் கழகத் தமிழ்ப் போகர முதலி போலன்றி, ஓரளவேனும் மெய்ப்பயன் நல்கும் ஒரு நூலாக இருக்கும்படி ஆங்கிலத் தமிழ் அகர முதலியை வெளியிட்ட பெருமை திரு. சிதம்பரநாதன் அவர்களைச் சார்ந்ததாகும். இவர்க்குத் துணை நின்றுற்றிய திரு. க. அப்பாத்துரையார் அவர்களும் இப்பணிக்குப் பெரு முயற்சி நல்கியிருந்தாலும், 'தமக்குற்ற தலைமைப் பொறுப்பில்' 'வையாபுரி' வேலை செய்யாது நேர்நின்று தமிழ்க் கடன் ஆற்றிய திரு. சிதம்பர நாதனார் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். போலித் தமிழ் பேராசிரியர்களே பெரும்பாலும் பல்கலைக் கழகத் தலைமையிடங்களில் அமர்ந்துள்ள இக்காலத்தில், திரு. சிதம்பர நாதனார் போல் ஓரிருவரேனும் ஓரிர் இடங்களினின்று மெய்த்தமிழ்த் தொண்டு புரிய வாய்ப்பின்றிப் போனமைக்குத் தமிழரின் போகூழை எண்ணி வருந்துவதன்றி வேறென் செய்கோம்?

–பெருஞ்சித்திரன்.

க. ப. அறவாணன், மு. க; கீ.க.தே. பாளையங்கோட்டை.

[முன்னிதழ்த் தொடர்ச்சி]

தொல்காப்பியத்தில் வழக்கு.

5-1. வழக்கு: செய்யுள் என்பது இலக்கிய மொழியைக் குறிக்கிறது. எனில் வழக்கு என்பது செய்யுளுக்கு மறுதலையானதைக் குறிக்க வேண்டும். மறுதலையானது இலக்கிய மொழி அல்லாதது எஃது என்பது இனி ஆராயப்படும்.

'சில சொற்பிறந்த அக்காலத்து இஃது அறத்தை உணர்த்திற்று; இது பொருளை உணர்த்திற்று; இஃது இன்பத்தை உணர்த்திற்று என்றறிய நிகழ்வது'-வழக்கு எனப்படும் என்பது அரசஞ் சண்முகனார் விருத்தியுரை.[2] நச்சினார்க்கினியர் கூறுவதை அப்படியே பெயர்த்துச் சொல்கிறார். அவ்வளவே!

நச்சினார்க்கினியர் மேலும் வழக்கு என்பதை விரித்து எழுதுகிறார்." உலகமென்றது பலபொருளொருசொல் லாகலின் ஈண்டு உயர்ந்தோரை உணர்த்திற்று. உலகம் அவரையே கண்ணாக உடைமையின், என்னை?

> வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் டாக லான-[3]

என மரபியலுட் கூறுதலின் அவ்வுயர்ந்தோராவர். அகத்தியனாரும் 'மார்க்கண்டேயனாருந் தலைச்சங்கத்தாரும் முதலாயினர்" என்பது அவர்

2. சண்முக விருத்தி. பக்கம்: 167.
3. தொல்காப்பியம் 1592.

தரும் விளக்க விருந்து. எல்லா உரையாசிரியர்க்கும் வழக்கு என்பது சான்றோர் வழக்கையே குறித்தது என்பதில் முரண்பாடில்லை. இதுவே கருத்தாயின்

'உண்மை உரைப்பதே திரு வி. க. வின் வழக்கு' என்றுரைக்கும் போது, வாயால் உண்மை உரைப்பதும், செயலால் உண்மை காட்டுவதும், அன்றி எழுத்தாலும் உண்மையே உரைப்பார் என்பது தானே போதரும். ஆகலின் செய்யுளுண்மை, எழுத்துண்மை எனத் தனியே பேச வேண்டா; வழக்கு உண்மை என்றலே போதும் என்ற கருத்துப் பெறப்படும். பெறப்பட்டுச் சான்றோர் நெறி குறிக்கும். போது 'வழக்கு' எனக் குறித்த அளவிலேயே ஏனைய நெறிகளும் அவரிடம் உள என்பது உய்த்துணரப்படும். செய்யுள் வழக்கு என விதந்து கூறுதல் மிகைபடச் சொன்னதாகவும் படும்; அதனால் பாயிரத்துள் வரும் செய்யுள் என்பது தேவையின்று என்பதும் கொள்ளப்படும். இந்த ஐயம் சிவஞான முனிவர்க்கும் எழுந்திருக்கிறது. அவர் ஓர் அமைதி கூறுகிறார்'.

'வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான'

என மரபியனுட் கூறுதலின் வழக்கெனவே உயர்ந்தோர் வழக்கென்பதூம், அதனோடுடன் எண்ணப்படுதலின் செய்யுளும் அவர் செய்யுள் என்பதூஉம் தாமே பெறப்படுதலின் அது மிகையாம் என மறுக்க. வழக்கெனவே செய்யுளும் அடங்குமாயினும் தலைமை தோன்ற வேறு கூறினார். முனிவர் வந்தார். அகத்தியனும் வந்தான் என்புழிப் போல். உலக மொழியும் வேத மொழியும் எனப் பகுத்த மாபாடியத்திற்குக் கையடனாரும் இவ்வாறே உரைத்தார்[4]—என்று அமைதி செய்கிறார். நச்சினார்க்கினியரை மறுப்பது போன்று இவ்வுரை அமையினும் சிவஞான முனிவர்க்கும் 'சான்றோர் வழக்கு' என்பதே உடன்பாடு. இக்கருத்து அவரது 'இலக்கண விளக்கச் சூறாவளி' யில் அமைந்து கிடக்கிறது.[5]

5-2. தொல்காப்பியர்க்குச் சான்றோர் வழக்கு என்பதே எண்ணமாயின் நாம் இன்னொன்றும் வினவ முடியும். செய்யுள் என்பது

---

4. தொல். பாயிர விருத்தி. ஆறுமுக நாவலர் பதிப்பு. பக்: 5.
5. இலக்கண விளக்கச் சூறாவளி. நாவலர் பதிப்பு. பக்: 82.

வழக்கிலிருந்து பிறப்பது. வழக்கின்றிச் செய்யுள் பிறக்க இயலாது. வழக்கென்ற மலர்களைக் கொண்டுதான் செய்யுள் என்ற மாலை தொடுக்கப்படுகிறது. ஆதலின் செய்யுள் என்ற அளவிலேயே வழக்கு என்பது பெறப்படும். மாலை என்று சொன்ன அளவிலேயே மலரும் பெறப்படுதல் போல; ஆதலின் வழக்கென்று தொல்காப்பியர் தனியே சொல்ல வேண்டாவே! இவ்வாறு சொல்வதற்கும் தொல்காப்பியமே சான்றாக நிற்கிறது.

உயர்ந்தோர் கிளவி வழக்கொடு பகுதலின்
வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே–[6]

என்றும்,

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான–[7]

என்றும்,

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை–[8]

என்றும்,

அவரே கூறுதலின் செய்யுட்கு அடிப்படை மரபும் வழக்கும் என்பது அறியப்படும். செய்யுள் என்று சொன்ன அளவிலேயே மரபும் வழக்கும் பெறப்படுகின்றது. ஆகலின், வழக்கு என்பது மிகைபடக் கூறல் எனப் பனம் பாரனாரைக் குற்றக் கூண்டில் ஏற்ற நேரிடும்.

5–3. சான்றோர் வழக்கு என்ற மரபியல் நூற்பாவை எடுத்துக் காட்டியதால் இன்னொரு திரிபுப் பொருளும் வர வாய்ப்புள்ளது.

வழக்கெனப்படுவ உயர்ந்தோர் மேற்றே என்ற மரபியல் நூற்பாவுக்குப் பேராசிரியர்,

'வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கே; என்னை? உலகத்து நிகழ்ச்சி எல்லாம் அவரையே நோக்கினமையின்; அவரையே நோக்குதல் என்பது அவராணையான் உலக வழக்கு செல்கின்றதென்றவாறு; எனவே உயர்ந்தோர் எனப்படுவார் அந்தணரும்

6. தொல். 1163.
7. தொல். பேராசிரியம். 645
8. தொல். பேராசிரியம். 648.

(509) அவர் போலும் அறிவுடையோரும் ஆயினர் என்பது[9] -என்று விளக்கம் உரைக்கிறார்.

தொல்காப்பியப் போக்கினை ஆராயும் போது அந்தணர் என்பது சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியாரையே குறிக்கிறது என்பது தெளிவாகிறது.[10] ஆக அந்தணரை என்பது பார்ப்பாரை-பிராமணரை அவர் பேசும் மொழியை வைத்துத்தான் தொல்காப்பியர் இலக்கணஞ் செய்தார் என்ற ஒரு வேறுபாடான பொருளுக்கு ஒரு சிலர் வந்து விட்டால் கூட வியப்பதற்கில்லை!

5-4. உலகம் என்ற அளவிலேயே அஃது உயர்ந்தோரைக் குறிக்கிறது எனில் "நல்"(லுலகத்து) என்ற பண்படை எதற்காக? தேவையின்றிக் கூறினர் (Redundancy) என்றன்றோ பொருள்படும்?

5-5. வழக்கு, செய்யுள் என்பன எழுத்து, சொல் என்ற இரண்டிற்கு மட்டும் அடிப்படையாக இருக்கவில்லை. எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றிற்கும் அடிப்படையானவை என்பதை இங்கு நினைவு கூர்க. அதுவே பாயிரக் கருத்து என்பதையும் உணர்க.

6-1. இனி எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் அல்லாமல் பொருளதிகாரமும் சான்றோர் வழக்கை நோக்கிச் செய்யப்பட்டது என்பதே மேற்கண்டோர் கருத்து என்பது உய்க்கத் தரும்.[11] அவ்வாறெனில் பொருளதிகாரத்தில் கூறப்பட்ட முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற ஒத்த ஐந்திணை ஒழுக்கங்கள், கைக்கிளை பெருந்திணை என்ற ஒவ்வாத் திணை ஒழுக்கங்களும் சான்றோரை நோக்கிச் செய்யப்பட்டன என்பதே உட்பொருள்.

'காமப் பருவத்திற்கு அமைதியில்லாத இளமைப் பருவத்தாள் ஒருத்தி கண்ணே தலைவன் ஒருவன் இவள் எனக்கு மனைக் கிழத்தியாக யாள் கோடல் வேண்டுமெனக்கருதி மருந்து பிறிதில்லாப் பெருந்துயரெய்தித்தனது நன்மையும், அவளது தீமையும் என்கிற இரண்டு

9. பேராசிரியம். கழகப்பதிப்பு. பக்: 477.
10. பார்க்க: தொல். 102, 1092, 1570, 1572, 1574
தொல். பொருள். இளம்பூரணம். பக்: 257
11. தொல். பொருள். 23 இளம் பூரணம்.

கூற்றுன் மிகப் பெருக்கிய சொற்களைத் தன்னொடும் அவளொடும் கூட்டிச் சொல்லி அச் சொல்லிற்கு எதிர்மொழி பெறுதே பின்னுந் தானே சொல்லி இன்புறுதல்.[12]–கைக்கிளையின் இலக்கணம்.

காமவயப்பட்டு மடலேறுதலும், இளமை கழிந்து முதியாளைக் காமுறலும், காம மிகுதியானே எதிர்ப்பட்டுழி வலிதில் இன்பம் நுகர்தலும் பிறவும்–பெருந்திணை எனப்படும்.

தொல்காப்பியர் சான்றோர் வழக்கங்களைப் பார்த்துப் பொருளிலக்கணம் செய்தாராயின் அக்காலச் சான்றோர் எல்லாரும் ஒரு தலைக் காமமும் ஒவ்வாக்காமமும் உற்றுக் காமவெறி பிடித்து அலைந்தார் என்றன்றோ பொருள்கொள்ள நேர்கிறது?' ஏவல் மரபின் ஏனோடும் உரியர்' (பொருள் 26) என்பதால் கைக்கிளை பெருந்திணைக்கு இழிந்தோரே உரியர் என்பது பெறப்படும்.

> ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
> ஆழி எனப்படு வார்.–[13]
>
> குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
> எந்நலத் துள்ளதூஉம் அன்று–[14]

எனச் சான்றோர்க்கு இலக்கணம் வகுத்த நாட்டில் சான்றோர் காமவெறி பிடித்தலைந்தனர் என்றால் அஃது எத்துணைப் பொய்ம்மை?

1–1. தொல்காப்பியக் காலத்தில் ஆண்மகன் பரத்தையர் மாட்டும், காமக்கிழத்தியரிடத்தும் செல்லுவது ஒரு பொழுது போக்காக இருந்தது.[15]

ஓர் ஆடவன் தொன்முறை மனைவி, இல்லத்தில் இனிதிருக்க அவளை விட்டுப் பிரிந்து இன்னோர் இளம் பெண்ணுடன் காதல் வாழ்க்கையில் களவொழுகத்தில் ஈடுபடுதலும், திருமணம் செய்து கொள்ளுதலும் தவறாகக் கருதப்படவில்லை. மனைவியர் பலர் பெற்ற பிள்ளைகள்

---

12. தொல். பொருள் நச்சினார்க்கினியம் S.V.P. பதிப்பு பக். 161.
13. திருக்குறள் 989;
14. திருக்குறள்: 982.
15. தொல். கற்பியல்: 5, 6, 9, 10, 31.

ஓர் ஆண் மகனுக்கு இருந்தனர் என்றும் அறிகிறோம்[16]. உரையாசிரியர்கள் கருத்துப்படி மேற்கண்ட பண்புக் குலைவான செயல்களை எல்லாம் சான்றோர் பின்பற்றி ஒழுகினர், அவரைப் பார்த்துத் தொல்காப்பியர் பொருளிலக்கணம் செய்தார் என்றுதானே ஆகும்?

ஆதலின் உரையாசிரியர்களை முற்ற நம்பித் தொல்காப்பியத்தை அணுகுவோமானால் நமக்கு இத்தகு வியத்தகு முடிவுகளே காத்துக் கொண்டிருக்கும். ஆதலால் தொல்காப்பியத்தை—அதற்கு முகமான பாயிரத்தைத் தொல்காப்பிய ஆட்சிகொண்டே நாம் இங்கு ஆராய்வது நல்லது.

8-1. வழக்கு என்ற சொல்: வழக்கென்ற சொல்லிற்குப் பல பொருள் உண்டு என்பது முன்னரே குறிக்கப்பட்டது. தொல்காப்பியர் வழக்கு என்ற சொல்லை *32* இடங்களிலும், 'வழங்கியல்' என்ற சொற்றொடரை *5* இடங்களிலும் வழங்கியுள்ளார்.

வழக்கத்தான்: தொல்: நூற்பா: *246, 270, 312, 457, 630, 1255.*
வழக்கம்: *980, 999.*
வழக்காறு: *501.*
வழக்கியல்: *731, 946, 1450.*
வழக்கின்: *505, 510, 650, 1021, 1466.*
வழக்கினும்: *999-1, 1.*
வழக்கு: *333, 1163-1-1, 1164, 1168, 1568, 1592.*
வழக்கும்: *500.*
வழக்கொடு: *132, 171, 881, 1032, 1242.*
வழக்கியல்: *22, 480, 483, 597, 1028.*
வழக்கென்னுஞ் சொல் மேற்கண்ட இடங்களில் 5 பொருள்களில் வருகிறது.

1 வழக்குப் பயிற்சி (Usage)

எ.டு: பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன–[1]

16. தொல். கற்பியல்: *5, 6, 10.*
தமிழ நாகரிகர் வரலாறு. திருநாவுக்கரசு பக்: *196.*

1. தொல்: *533.*

2 பழக்கம் (Custom)

எ.டு: முந்நீர் வழக்கம் மகடூவொடில்லை–[2]

3 உலக வழக்கு (Worldly Terrestrial)

எ.டு: வழக்கின் ஆகிய உயர் சொற்கிளவி–[3]

4 ஒழுக்கம் (Conduct)

எ.டு: நாவிரு வழக்கின் தாபதப் பக்கம்–[4]

5 அறநெறி(நீதி) வழக்கம்: (ethical law)

எ.டு: இடைச்சுர மருங்கின் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கும் உரியன்–[5]

இங்கு உன்னிப் பார்க்கத்தக்க தொன்றுண்டு. வழக்கு என்று சொன்ன உடனேயே சான்றோர் வழக்கைக் குறிக்கும் படியாக[6] வெளிப்படையான ஆட்சி தொல்காப்பியத்துள் இல்லை (மரபியல் தவிர)

8–2. தொல்காப்பியர் வழக்கை ஒன்றனோடு மிகவும் பிணைத்து ஒரு தொடர் நீர்மைத்தாக வழங்குகிறார்.

நாடக வழக்கு[7] – புனைந்துரை வகை (நச்சி)
உலகியல் வழக்கு[8] – உலக வழக்கு (நச்சி)
புலனெறி வழக்கு[9] – புலவராற் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கு
கூடிவரு வழக்கு[10] – இளந்துணை மகார் தம்மிற்கூடி விளையாடல்
மரபின் வழக்கு[11] – மரபினுடைய வழக்கு (இளம்பூ)

இங்கு மற்றொன்று கவனித்தற்குறியது. 'சான்றோர் வழக்கு' என அவர் யாண்டும் ஆளாமையே!

8–3. பாயிரத்தில் வழக்கு செய்யுள் என இரண்டையும் மருங்கு வைத்துப் பேசுதல் போன்று நூலுள் மூன்று இடங்களில் தொல்காப்பியர் பேசுகிறார்.

---

2. தொல்: 980.
3. தொல்: 510.
4. தொல்: 1021.
5. தொல்: 1466 பேரா. உரைபக் 404.
6. திருக்குறளில் உண்டு பரிமேலழகர் உரை பக்: 140, 485.
7. தொல்: 999.
8. தொல்: 999.
9. தொல்: 999.
10. தொல்: 650.
11. தொல்: 1242. [இளம்பூ பொருள்: 262.

1. இனச் சிட்டில்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை
வழக்காறல்ல செய்யு ளாறே £
2. செய்யுள் மருங்கினும் வழங்கியல் மருங்கினும் *
3. கிளந்த அல்ல செய்யுளுள் உருநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும் ¶

இவற்றுள் வழக்கும் செய்யுளும் ஒன்றன்று இரண்டு: அவை நாணயத்தின் இரு பக்கங்களைப் போல மொழியின் இரு பக்கங்களா கும். மக்கள் இனம் இரு பிரிவுகளை உடையது என்புழி ஆண் பெண் என்ற இரு பகுப்புடையது என்பதே கருத்தாகி உயர்ந்த ஆண், உயர்ந்த பெண் என்பது கருத்து ஆகாதது போல மொழியும் இரு பிரிவுகளை உடையது. ஒன்று உலக வழக்கு மொழி; மற்ருென்று இலக்கிய வழக்கு மொழி என்பதாம்.

9–1. வழக்கு என்பதை அடுத்து அதன் தொடர்ச்சியாக 'மொழி' என்பதற்கு வந்து விட்டோம். மொழி என்ற சொல்லைத் தொல்காப்பி யர் 77 இடங்களில் பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்துகிருர். 'வழக்கு'– என்னுஞ்சொல்வழக்கு மொழி என்பதனேடு நெருங்கிய தொடர்புடை யது ஆதலின் மொழி என்பது பற்றியும் ஆராய்வது வேண்டற்பாலது.

மொழி என்பதைச் சொற்ருெடர் என்னும் பொருளிலும்†, சொல் என்னும் பொருளிலும்ூ, மக்கள் மொழி(Language) எனும் பொருளி லும்¬, பழமொழி எனும் பொருளிலும்○ தொல்காப்பியர் ஆளுகிருர்.

9–2. பிணைந்த தொடராகக் – குறிப்பு மொழி□, இழுமென் மொழி∞, மென்மொழி△, பொய்ம் மொழி+, நகைமொழில, மங்கல

£ 501.
* 946.
¶ 483.
† தொல்: 895.
ூ தொல்: 75.
¬ தொல்: 932.
○ தொல்: 1547.
□ தொல்: 1435.
∞ தொல்: 1494.
△ தொல்: 1491.
+ தொல்: 1429.
ல தொல்: 1429.

குறிப்பு மொழி: பொருட்குப் புறத்தே எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராது பொருட்குப் புறத்தே பொருளுடைத்தாய் நிற்பது–பேரா.
இழுமென் மொழி: மெல்லென்ற சொல்–பேரா. 550.
பொய்ம்மொழி: ஒரு பொருளின்றிப் பொய்ப்படத் தொடர்ந்து சொல் [வது–பேரா.
நகைமொழி: நகுதற் கேதுவாகும் தொடர் நிலை. பேரா. 486.

மொழி ÷, மறைமொழி ::, வைகியமொழி ∓ என ஆளும் அவர் 'செய்யுள் மொழி' எனச் செய்யுளியலில் ஆளுகிறார்.

"செய்யுள் மொழியான் சீர்புனைந்து யாப்பின்
அவ்வகைத்தானே அழகெனப் படுமே" – ⊥

"செய்யுட்குரிய மொழி திரி சொற்பயிலாத மொழி"

எனப் பேராசிரியர் இதற்கு உரை செய்கிறார்.

ஒன்றனது ஆற்றலான் ஒன்றைப் பெறச் செய்வது நூன் முறை. செய்யுள் மொழி என்பது ஒன்றுள்ளது ஆயின் அதனது ஆற்றலான் பெறப்படுவது எது?

வழக்கு மொழி என்பதுதானே! வழக்கு மொழி என்புது எது?

பேச்சு மொழி என்பதுதானே! பேச்சு மொழி என்பது எது?

≠ உயர்ந்தோர் இழிந்தோர் பேசும்மொழி என்பதுதானே! அன்றியும், சேரி மொழி ∢ பற்றி 503, 553-ஆம் (பேராசிரியம்) நூற்பாக்களில் குறிப்புள்ளன. ஆதலால் தொல்காப்பியத்திற்கும் பேச்சு மொழி அடிப்படையாக இருந்தது என்பதும் புலனாகும். (Colloguial language or spoken language)

10-1. அடுத்துத் தொல்காப்பியர்க்கு வழக்கு என்பது இரு திறத்தாரும் பேசும் மொழி வழக்கு என்பது கருத்தாயின்–மரபியலில்

'வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே' என ஏன் நூற்பாச் செய்யவேண்டும் என வினாஎழுவது இயற்கை. அதற்கு விடையாவது'.

மேற்கண்ட நூற்பா மரபியலில் நூலதிகாரம் பற்றிப் பேசும் இடத்தில் உள்ளது; நூலின் மரபு பேசப்படும் இடத்தில் அவர் அதனைப் பேசுகிறார்! நூல் செய்வார் யார்? உலகத்தில் பரவிக் கிடக்கும் குப்பனும் சுப்பனுமா நூல் செய்கிறார்கள்? உயர்ந்த அறிஞர் தாமே! ஆதலின் அங்குக் குறிப்பிடப்பட்ட வழக்கு நூல்வழக்கைப் பற்றியது; மொழி வழக்கைப் பற்றியது அன்று. [வளரும்]

÷ தொல்: 1190. வைகிய மொழி: தலைவன் வஞ்சித்த தோழி
:: தொல்: பேரா: 490. தலைவி கூறுமொழி(அல்)தீங்கை வைத்த
∓ தொல்: 1190. ⊥ தொல்: 1492. [மொழி. பேரா: 486.
≠ வழக்கு: Usage in respect of words in litterature and in speech of the two classes. Tamil Laxicon vol. VI Page 3541.
∢ தொல்காப்பியம்: பேரா. க. வெள்ளைவாரணம். பக். 397.

-மணிவேலன்-

ஒன்று சேர ஒரே வழி !

செடியினிலும் கொடியினிலும் கோட்டினிலும் மலர்ந்திருந்தே
சிரித்திட் டாலும்
கடிமலர்கள் நிறத்தாலும் மணத்தாலும் மாறுபட்டுக்
கவர்ந்திட் டாலும்
தொடுத்தெடுத்த மாலையிலே அவையெல்லாம் ஒன்ருகச்
சிரிக்கும் போதில்
அடடா! ஓ! அவ்வழகில் சொக்காதார் மாநிலத்தில்
ஆரே உள்ளார்?

நாராலே, வேறுபட்ட மலரெல்லாம் ஒருங்கிணைந்த
நலமே கண்டும்
யாராலோ இங்குவந்த சாதியினுல் சமயத்தால்
சார்ந்த கட்சிப்
போரதனுல் தமிழரெலாம் வெவ்வேருய்க் கிடக்கின்ருர்!
புரிந்து கொண்டால்
நாராக நமையெல்லாம் "ஒருபொருளே" இணைத்துவைக்கும்!
நலமே சேர்க்கும்!

சமயத்தால் தமிழர்களை ஒருங்கிணைக்க முயன்றவர்கள்
சலித்தே விட்டார்!
இமயம்போல் பொய்சொல்லிச் சாதியினுல் 'இணைப்பவர்கள்'(?)
இழிவே கண்டார்!
உமியான கட்சிகளால் இணைப்பதற்கு முயன்றவர்கள்
ஓய்ந்தே விட்டார்!
தமிழர்காள்! நாமிணைய வழிசொல்வேன்! காதுகளைச்
சாய்த்துக் கேட்பீர்!

தமிழொன்றே நமையிணைக்கும்! தலைமீதில் அடித்திதனைச்
சாற்று கின்றேன்!
கமிழ்கின்ற செந்தமிழை நாராகக் கைக்கொண்டு,
கலந்து வாழும்
தமிழர்களை ஒன்றுக்க இந்நாட்டில் முயல்வதற்குத்
தலைவ ராக
இமைப்போதும் சுணங்காது யார்வரினும் அந்நாளே
இணைந்த நாளாம்!

வாய்பேசா வால்குரங்கும் குட்டியினை வயிற்றோடு
சேர்த்த ணைக்கும்!
நாயெனினும் தன்குட்டி வளர்வதற்குத் தன்பாலை
நாளும் ஊட்டும்!
தாய்ப்பறவை குஞ்சுக்கு வாயினிலே இரைகொணர்ந்து
சலியா தூட்டும்!
ஏய்! இந்தத் தமிழன்தான் தான்பெற்ற தமிழ்வளர்க்க
இசைய மாட்டான்!

ஓலமிடும் கழுதையதும் குட்டியினை அடிப்பவனை
யுதைத்துத் தள்ளி
நாலெட்டுப் பல்லுதிர்க்கும்! காக்கையும், தன்குஞ்சை
நசுக்க வெண்ணி
வாலாட்டும் பையலினை இனத்தோடு கூச்சலிட்டு
வந்து தாக்கும்!
காலாடித் தமிழன்தான் தன்மொழியை அழிப்பவனின்
காலில் வீழ்வான்!

எச்சிலையை நக்குகின்ற நாய்கூட வால்மிதித்தால்
கடிக்கும் எட்டி!
முச்சிலிலே போட்டிடுவாள் பாப்பாவும் மண்பிட்டை
மிதித்து விட்டால்!
'மெச்சினுர்க்கே இனியனுய்' வாழ்தமிழன், பிறர்தமிழை
மிதித்திட் டாலும்
இச்சென்றே அவர்காலை முத்தமிடப் போவானே?
இழிந்து விட்டான்!

தாய்க்கோழி 'குர்'ரென்று குரல்கொடுத்தால் இரைபொறுக்கத்
தனித்துச் சென்ற
தூய்சிறகுக் குஞ்செல்லாம் தாயிடத்தில் ஓடிவந்து
சிறகி னுள்ளே
மாயாது பதுங்குகின்ற விழிப்புணர்வு தமிழ்மக்கள்
மனத்தில் வந்து
தோய்வதுதான் எக்காலம்? தமிழ்க்குரலைக் கேட்டவுடன்
சேரல் என்றோ?

மூச்சினிலும் தமிழ்வேண்டும்! விழிப்பினிலும் தமிழ்வேண்டும்!
முழங்கு கின்ற
பேச்சினிலும் தமிழ்வேண்டும்! வீழ்ச்சியிலும் தமிழ்வேண்டும்!
பிறந்த பிள்ளை
வீச்சென்றே அழுகையிலும் தமிழ்வேண்டும்! பெருமகிழ்வால்
விம்மும் போதும்
நீச்சலிட்டுக் குளிப்பதற்குத் தமிழ்வேண்டும்! தமிழ்வேண்டும்
நினைப்பி லெல்லாம்!

சொட்டுந்தேன் தமிழ்மொழியை மையமென வைத்ததனைச்
சுற்றிச் சுற்றி
வட்டமிட வேண்டுமடா அரசியலும் பொருளியலும்
வளர்க லையும்
கட்டுசம யங்களுமே! தமிழ்விட்டு விலகிவிட்டால்
கட்டுக் கோப்புக்
கெட்டொழிந்து போய்விடுமே! வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும்
தமிழைச் சுற்றி,

வட்டமிட்டு வட்டமிட்டுப் பழகிவிட்டால் வாழ்வெல்லாம்
வளமே சேரும்!
திட்டமின்றி வாழ்கின்றாய்! திட்டுண்டு வாழ்கின்றாய்!
சீ! சீ! இன்றே
கொட்டாவி ஒழித்துவிடு! தமிழுணர்வில் குளித்துவிடு!
தமிழ்ச்சொல் காதில்
பட்டாலே அங்குவந்து படையணியாய்த் திரண்டுவிடு!
பாராய் பின்னர்! O

–தென்கச்சி. கோ. சுவாமிநாதன்–

[முன்னிதழ்த் தொடர்ச்சி]

விரல்விழி மங்கையர் !

உருசிய அறிவியற் கழகத்தைச் சேர்ந்த மைக்கைல் சுமிர்நாவ் (Mikhail Smirnov of the Biophysics institute of the U.S.S.R Academy of Sciences) என்பவர் ஒரு புதிய கொள்கையைக் கூறுகிறார். "விரல்களில், கண்களில் உள்ளதுபோல ஒருவகை விழித்திரைப் பொருள்கள் (Retina) இருக்கின்றன. அவை பொருள்களைப் பார்க்கின்றன." இது புரட்சிகரமான ஒரு கொள்கைதான். இதை மெய்ப்பிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் ஒன்று'

சிவப்பு நிறத்திலிருந்து (Red)விரைவாக மாறிச் சாம்பல்(Grey) நிறத்தைப் பார்க்கும்போது நாம் நீலநிறத்தை(Blue) உணர முடியும். இதேபோன்ற நிறமாற்றத்தை 'உரோசா' தன் விரல்களாலேயே உணர்கிறாள். உருசியர் 'விரல்விழி மங்கையரி'ல் மேலும் இருவரைக் கண்டுபிடித்தார்கள். கார்கோவில் (Kharkov) உள்ள 9 ஆண்டு நிரம்பிய பள்ளிச்சிறுமி இலேனா பிலிஸ்னோவா (Lena Bliznova) என்பவள் ஒருத்தி. இலெனின் கிராடில் (Leningrad) வசிக்கும் 37 அகவைப் பெண் நைனா குலாகிமா(Nina Kulagima) என்பவள் இன்னொருத்தி. இலேனா, நைனா ஆகியோரிடம் பல ஆய்வுகள் நடத்தப்பட்டன.

உருசியர்கள் இந்தக் 'கண்ணில்லாப் பார்வை'யை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் முயற்சியில் இறங்கினார்கள். "அறிவியலும் வாழ்வும்" (Science and Life) என்ற இதழ் இதுபற்றி எழுதியிருக்கிறது. இந்த முயற்சியில் அவர்கள் வெற்றியும் பெறுகிறார்களாம். நிசனிதாகில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் (Nizhni Tagil Teacher's Training School) உளவியல் ஆய்வுக் கூடத்தின் தலைவர் ஆபிராம் நோவோ மீசுகி (Abram Novomeisky) என்பவர் போரிசு மாலிசேவ் (Boris Malyshev) என்பாருக்கு இந்தப் பயிற்சியைக் கொடுத்தார்.

போரிசுவின் கண்கள் கட்டப்பட்டன. மிசை மீது சிவப்பு, மஞ்சள் தாள்கள் வைக்கப்பட்டன. இவருடைய கைகளைப்பிடித்து

மஞ்சள் தாளின் மேல் வைக்கிறார். அதை நன்றாகத் தடவிப் பார்க்கும் படி கூறுகிறார். 'இது மஞ்சள் நிறம்' என்று கூறுகிறார். பலமுறை இப்படிக் கூறுகிறார். இதைப் போலவே சிவப்புத் தாளிலும் செய்கிறார். பிறகு'போரிசு' இரண்டு தாள்களையும் மாறிமாறித் தொட்டுப்பார்க்கிறார். நிறத்தை உணர முயல்கிறார். அப்போது ஆசிரியர் ஆபிராம் நிறங்களை அவ்வப்போது கூறுகிறார். அதற்குப் பிறகு பல நிறங்களில் தாள்களை வைக்கிறார். அதன்மேல் கண்ணாடித்தாள் ஒன்று வைக்கப் படுகிறது. இதன்மேல் அவர் விரல்களை வைத்துத் தடவுகிறார். பிறகு அவர் வண்ணங்களைச் சரியாக சொல்லக்கூடிய திறமையைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெற்று விடுகிறார். இந்தப் பயிற்சியின் முதல்கட்டம் வண்ண வேறுபாடுகளை அறிவது ஆகும். அதன் பிறகு எழுத்துகளையும், வடிவங்களையும் பார்க்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்படி, அறிவியலில் ஒரு புதிய மாறுதலை உண்டாக்கியிருக்கிறது இந்த 'விரல்வழிப்பார்வை'. உருசியாவில் ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே 'ஐவான் செழினவ்' (Ivan Sechenov) என்ற பெரிய அறிவியலறிஞர்(a great physiologist)ஒருவர் தொடுகின்ற உறுப்புகளுக்கும், பார்வை உறுப்புகளுக்கும் பலவகையான தொடர்புகளும் ஒற்றுமையும் இருப்பதை உணர்த்தியிருக்கிறார். 1920-இல் பாரீசு நகரில் 'சூல்சு ரோமைன்சு'(Jules Romains-the writer-Scientist) என்ற அறிவியலார் ஒருவர் "கண்ணில்லாப் பார்வை" ("Eyeless Sight") என்றொரு நூல் எழுதினார். "மாந்த உடலில் மூக்கு உள்பட எல்லாப்பகுதிகளிலும் 'மிக நுண்ணிய பார்வை கண்ணறைகள்' (Microscopic Sight Cells)உள்ளன. மாந்தஉடலில் இன்னும் கண்டு பிடிக்கப்படாமல் மறைந்து கிடைக்கும் எண்ணற்ற திறமைகளில் இதுவும் ஒன்று" என்று அந்தப் பொத்தகத்தில் அவர் எழுதுகிறார்.

எரால்டு மேலிங்கு (Harold Mehling) என்பார் 'சாகா' (Saga) என்றோர் இதழில் இதுபற்றி விரிவாக எழுதியிருப்பதை அண்மையில் படித்தேன். 'விரல்களால் பார்க்க முடியும்' என்ற புதிய கொள்கையைத் தொடங்கிவைத்த பெருமை பெண்களுக்கு உண்டு. ஆண்களின் சார்பிலே, இயல்பாகத் தோன்றும் ஒருவகை அச்சத்தை இங்கே வெளியிட விரும்புகிறேன். பெண்ணின் இரண்டு விழிகளிலிருந்து தப்புவதே ஆண்மகனுக்குக் கடினமான செயலாக இருக்கிறது! இப்படி இருக்கையில், மூன்றுவதாக ஒரு விழியா? ! O

திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு நினைவாக வாரியங்காவல் வள்ளுவர் மன்றத்தார் நடத்தும், திருச்சி மாவட்டத் திருக்குறள் அரங்கேற்றப் போட்டி அறிக்கை.

உலகப் பொதுமறை அருளிய தெய்வப் புலவராம் வள்ளுவப் பெருந்தகை எழுந்தருளி, ஈராயிரம் ஆண்டு நிறைவு பெற விருப்ப தறிந்து உவகைக் கடலில் மூழ்கித் திளைக்காத தமிழர் எவரும் இரார். அதுபோழ்து, மாணவர்களுக்கென்று திருக்குறள் அரங்கேற்றப் போட்டியொன்று நடத்த மிகவும் விழைகிறோம். இத்திட்டமானது பயனற்ற திரைப்படப் பாடல்களைப் பாடிக்கொண்டும், நாடொறும் புற்றீசலெனப் பெருகிவரும் பயனற்ற தாளிகைகளைப் படித்துக்கொண்டும் திரிகின்ற இன்றைய மாணவச் சிறார்களைக் குறள்நெறியாம் நன்னெறியில் உய்ப்பதற்கு ஒரு வழி காட்டியாக அமையும் என்று உறுதியாக நம்புகிறோம். நடத்தப்படவிருக்கும் அரங்கேற்றப் போட்டியானது திருச்சி மாவட்டத்திலுள்ள எல்லா உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் கலந்து கொள்ளும் வகையில் விரிவான அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழுணர்வு மிக்குள்ள மாணவர்கள் அனைவரும் மிகுந்த எழுச்சியுடன் இப்போட்டியில் கலந்து கொள்ளும் பொருட்டு மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பொருட்டுத் திருச்சி மாவட்டத்தை ஏறத்தாழ ஒரே அளவு எண்ணிக்கையுள்ள உயர்நிலைப் பள்ளிகள் அடங்கிய பத்து வட்டங்களாகப் பிரித்துள்ளோம். வட்டங்களும் அவற்றிற்குரிய பள்ளிகளும் அடங்கிய பட்டியல் பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

திருக்குறள் அரங்கேற்றப் போட்டிப் பரிசுகள்.

மாவட்டப் பரிசு:- (அ) முதற் பரிசு 100 உருபா மதிப்புள்ள பொருள்.

வட்டப்பரிசு:- (அ) முதற் பரிசு 50 உருபா மதிப்புள்ள பொற்பதக்கம்.

(ஆ) இரண்டாம் பரிசு 30 உருபா மதிப்புள்ள பொற் பதக்கம்.

(இ) மூன்றும் பரிசு 20 உருபா மதிப்புள்ள நூல்கள்.

குறிப்பு:- இவ்வாறே பத்து வட்டங்களுக்கும் வழங்கப்பெறும். மேலும் பரிசுபெறும் மாணவர் அனைவருக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு நற்சான்றிதழ்களும் வழங்கப் பெறும். மாவட்டப் போட்டியில் இரண்டாவது பரிசு இல்லை.

போட்டிக்குரிய பகுதி: திருக்குறள் அறம்பொருள் இன்பம் முழுமையும்.

திருக்குறள் அரங்கேற்றம் செய்யும் முறை:

வட்டப்போட்டி:- வட்ட அளவில் போட்டிகள் நடைபெறும்போது குறள் முழுவதையும் அதிகார முறை பிறழாமல் அவ்வதிகாரத் தலைப்புகளைச் சொல்லி ஒப்பித்தல் வேண்டும்.

மாவட்டப் போட்டி:- வட்டப்போட்டியில் பொற்பதக்கம் பரிசு பெறும் தகுதி படைத்த மாணவரே மாவட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதி பெறுவர். அப்பதின்மரும் முன்போல் வரிசைபட ஒப்பித்தல் வேண்டியதில்லை. அவர்கள் நடுவர்கள் எந்த அதிகாரத் தலைப்பைச் சொன்னாலும் அந்த அதிகாரம் முழுவதையும் வரிசைபட ஒப்பித்தல் வேண்டும். மேலும் எந்தக் குறளின் தொடக்கத்தைச் சொன்னாலும் அந்தக் குறளைச் சொல்லுதல் வேண்டும்.

குறிப்பு:- ஈராயிரம் ஆண்டு விழா 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெறும். இப்போட்டிக்குக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. வட்டப்போட்டிகள் நடைபெறும் நாட்களும் இடங்களும் மாவட்டப் போட்டி நடைபெறும் நாளும் இடமும் பின்னர் உரிய காலத்தில் எல்லாப் பள்ளிகளுக்கும அறிவிக்கப்படும்.

ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள்: தமிழ்ப்பணியே தலையாய பணியென்க்கருதும் மாண்புமிகு தலைமை ஆசிரியர்களும், தமிழாசிரியர்களும், தமிழுள்ளம் நிறைந்த ஏனைய ஆசிரியப்பெருமக்களும், இப்போதிருந்தே தங்களால் இயன்ற வகையில் மாணவர்களிடையே குறள் உணர்வை எழுப்பி, ஏறத்தாழ திங்கள் ஒன்றுக்கு நூறு (100) குறள் மேனி ஒப்புவிக்கச் செய்து, இக் குறள் அரங்கேற்றப் போட்டியில் பங்கு கொண்டு தங்கள் பள்ளிக்குப் பெரும் புகழ் ஈட்டச் செய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம். எனவே ஆசிரியர் ஒவ்வொருவரும் குறைந்தது ஒவ்வொரு மாணவரையேனும் இப்போட்டியில் பங்கு கொள்ளச் செய்யின் இம் மன்றத்தின் நோக்கம் சிறப்பாக நிறைவேறும் என்று உறுதியாக நம்புகிறோம்.

ஓர் அறிவிப்பு:- இம்மன்றச் செயலாளர் அவர்களால் பயிற்றுவிக்கப் பட்டுவரும் மாணவர் குழுவொன்று வரும் தைத் திங்கள் முதல் பள்ளிதோறும் அரங்கேற்றம் செய்து மாணவர்களுக்கு எழுச்சியூட்டும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம.

பணிவானவேண்டுகோள்: இதனைக் கண்ணுறும் தமிழுள்ளம் நிறைந்த அன்பர்கள் பலரும் இதுபற்றித் தங்கள் உள்ளத்தில் தோன்றும் கருத்துகளை எழுதியும், இத்திட்டத்தில் குறைகள் இருப்பின் சுட்டியும் இப்பணியைத் திறம்பட ஆற்றுதற்குத் துணை நிற்குமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம். வணக்கம்.

மடல் தொடர்பு கொள்ளவேண்டிய செயலாளர் முகவரி:-

புலவர் ந. சுந்தரேசன், வள்ளுவர் இல்லம், ஆவூர், கீரனூர் வழி, திருச்சி மாவட்டம்.

யாழ் நூல்.

தமிழ் நாட்டில் இசை வழங்காத இடமே இல்லை என்று சொல்லுமள வுக்கு எந்த இடத்திலும் இசையைக் கேட்கலாம்; எந்த நேரத்திலும் இசையைக் கேட்கலாம். திருமணம் என்றால் பாட்டு; வளைகாப்பு என்றால் பாட்டு; குழந்தையைத் தொட்டிலில் இடுதல் என்றால் பாட்டு; இறை வழிபாடு என்றால் பாட்டு; ஏற்றம் இரைத்தல் என்றால் பாட்டு; ஓடம் செலுத்துதல் என்றால் பாட்டு; புகழவேண்டுமென்றால் பாட்டு; பழிக்கவேண்டுமென்றாலும் பாட்டு; இறந்தவரை எண்ணி அழவேண்டு மென்றாலும் பாட்டு–என்று இந்த இசையானது தமிழ் ம க் க ளோ டு இரண்டறக் கலந்து விட்டிருப்பதை எந்த நிகழ்ச்சியிலும் காணலாம்.

''ஓசை ஒலி யெலாம் ஆனாய் நீயே'' என்று இறைவனை வாழ்த் திய வாய் தமிழ் வாய் தான். ''பண்ணும் பதமேழும்......விண்ணும் முழுதானான்.''– என்று சொல்லிய வாய் தமிழ் வாய்தான். ''கண்ணாய் ஏழுலகும் கருத்தாய் அருத்தமுமாய், பண்ணார் இன்றமிழாய் பரமாய பரஞ்சுடரே!'' என்று பரவி, ''ஏழிசையாய் இசைப் பயனாய் இன்ன முதாய்'' அவனை உணர்ந்த உள்ளம் தமிழ் உள்ளம்தான். ''மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே!'' என்று இறைவன் அடிசேர்ந்து பெறும் பேரின்பத்திற்கு மாசில்லாத வீணையின் இசையை எடுத்துக் காட்டிய நெஞ்சமும் தமிழ் நெஞ்சந்தான்.

செவ்வேள் குன்றத்தில் ஒருபுறம் இயற்கை வனப்பும் மற்ருெரு புறம் செயற்கை வனப்பும் எதிர் எதிராக நின்று காண்போர் உள்ளத்தைக் களிபெருவகை அடையச் செய்யும் பாங்கினை நல்லழுசியார் என்னும் புலவர் ஒருவர் பரிபாடல் பாட்டொன்றில் வரைந்து காட்டுகிருர். ஒருபுறம் பாணர்கள் மிழற்றும் யாழின் இனிய இசை எழுகிறதாம். மறுபுறம் புதுமலர்த் தேனை யுண்ணும் வண்டுகள் இமிரும் இசை கேட்கிறதாம். ஒருபுறம் கோவலர் ஊதும் குழலினின்றும் இசை பிறந்து வருகிறதாம். மறுபுறம் தும்பிகள் பறந்து ஊதும் இசைவருகிறதாம். ஒருபுறம் முழவு என்னும் மத்தள ஓசை காதில் விழுகிறதாம். மறுபுறம் குன்றிலிருந்து வீழும அருவியின் நீர் ததும்பும் ஓசை செவியில் வந்து பாய்கிறதாம். ஒருபுறம் ஆடல் மகளிர் அசைந்தாடுதல் போல் மறுபுறம் பூங்கொடிகள் காற்றில் அசைந்து ஆடுகின்றனவாம். இப்படி மாறுபட்டு நிற்பதுபோல் இயற்கையும் செயற்கையும் எதிர் எதிராக இருந்து இன்பம் செய்கின்றதாம் அந்த மலைக்காட்சி.

> ''ஒருதிறம், பாணர் யாழின் தீங்குரலெழ
> ஒருதிறம், யாணர் வண்டின் இமிரிசையெழ
> ஒருதிறம், கண்ணார் குழலின் கரைபெழ
> ஒருதிறம், பண்ணார் தும்பி பரந்திசையூத
> ஒருதிறம், மண்ணார் முழவின் இசையெழ
> ஒருதிறம், அண்ணல் நெடுவரை யருவி நீர் ததும்ப
> ஒருதிறம், ஆடனல் விறலியர் ஒல்குபு நுடங்க
> ஒருதிறம், வாடை யுளர்வயிற் பூங்கொடி நுடங்க
> ... ...
> மாறுமாறுற்றனபோல் மாறெதிர் கோடல்
> மாறட்டான் குன்ற முடைத்து.'' —பரிபாடல்: 17

இவ்வாறு இயற்கையில் அமைந்த ஒலிகளிலும் இசையைக் கண்டு அதனைச் செயற்கை இசையோடு பொருந்த வைத்துக் காட்டிய உள்ளங்களும் தமிழ் உள்ளங்கள்தாம். இசைக்கென்று ஒரு பிரிவையே வைத்து இசைத்தமிழ் என்னும் பெயரால் இசையை வளர்த்து வந்தவர்களும் தமிழர்கள்தாம்.

நீராலும் நெருப்பாலும் மாற்ருராலும் அழிந்தன போக எஞ்சியுள்ள சில நூல்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் இயற்றமிழ் என்னும் பிரிவுக்குச் சான்ருக இன்றும் உள்ளன. ஆனல் இசைத்

தமிழுக்கும் அப்படிச் சில நூல்கள் இன்று உள்ளன என்று சொல்வதற்கில்லை. தலைக்கழகக் காலத்தில் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்று எண்ணிறந்த நூல்கள் இருந்தவாக அவற்றின் பெயர்கள் தாம் இன்று நமக்குத் தெரிகின்றனவேயன்றி அவற்றில் ஒரு நூலும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. கடைக்கழகக் காலத்து எழுந்த நூல்களை வகுத்துக் கூறும் களவியல் உரை, கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என இசைநாடக நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நூல்களையெல்லாம் காலமும் கயவரும் அழிக்க முயன்று வெற்றி பெற்றுவிட்டனர் என்றாலும் இவற்றினுள் பொதிந்த பொருள்கள் அழிவுறாதிருக்கும் வண்ணம் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு துறவி ஒரு பாவியத்தை இயற்றினார். அந்தப் பாவியத்துள் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் எவ்வத் துறையை விளக்கினவோ அவ்வத்துறை அனைத்தும் விளங்குமாறு செய்த அந்தத் துறவியின் பெயர்தான் இளங்கோ அடிகள் என்பது. அவர் இயற்றிய பாவியம்தான் சிலப்பதிகாரம் என்பது. ஆனால் அந்தப் பாவியத்துள் சொல்லப்பட்ட இசைநூற் பொருள்கள் தமிழர்க்குச் சரிவர விளங்காமலே இருந்து வந்தன. அவ்வாறு விளங்காமல் இருந்த இசை நூற் பொருள்களை விளங்க வைக்க வேண்டுமென்று இருபது ஆண்டுகளுக்குமுன் ஒரு துறவி ஒரு நூலை இயற்றினார். அந்த நூலில் இசைத்தமிழின் பெருமையை எல்லாம் நன்கெடுத்து விளக்கிய அந்தத் துறவியின் பெயர்தான் விபுலாநந்த அடிகள் என்பது. அவர் இயற்றிய நூல்தான் யாழ் நூல் என்பது.

யாழ் என்பது தமிழ் நாட்டுக்கே உரிய இசைக்கருவிகளுள் ஒன்றாகும். தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி என்னும் மூவகையான இசைக் கருவிகளில் நரம்புக் கருவியான யாழ் மிகவும் இனிமையான இசை பயப்பதாகும். 'குழலினிது யாழ்இனிது' என்று திருவள்ளுவரும் இதனைக் கூறுகிறார். "நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல் போல்" என்னும் சொற்றொடரால் யாழின் இசை இனிமையானது என்பதைக் கலித்தொகைப் பாடல் ஒன்றும் கூறுகிறது. திருக்குருகைப் பிரான் கார்முகில் வண்ணனைப் பாராட்டுகின்றபொழுது, "முன் நல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே!" என்று விளித்துப் பாடுகிறார். தேவாரப்பாடல் ஒன்றும், உமையொரு பாகனை, "யாழைப் பழித்தன்ன மொழி மங்கையொரு பங்கன்" என்று குறிப்பிடுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களும் இந்த யாழைப்பற்றிப் பேசாமல் இல்லை.

- தமிழக மகளிர்க்கொரு தனித்தமிழ்ப் பெட்டகம்!
- இல்லறம் பேணும் நல்லறப் பெண்டிர்க்கொரு தாயகம்!
- தமிழ்க்குலப் பெண்மணிகளின் கண்மணி!

பாவை

மகளிர் திங்கள் இதழ்!

ஆசிரியர்

குருமணி

தைத்திங்கள் முதல் நாளன்று மலரவிருக்கின்றது.

தனியிதழ் 50 காசு. ஆண்டுக் கட்டணம் உரு: 6-00.

எல்லா ஊர்களுக்கும் முகவர் தேவை.

எல்லா விளக்கங்களுக்கும்:

பாவை

சிதம்பரம் (தெ. ஆ.)

தமிழ்ச்சிட்டு

- 'தென்மொழி' வெளியிடும் குழந்தைகளின் தனித்தமிழ்க்கலை இதழ்! மாத வெளியீடு.
- 20 பக்கங்கள்—15 காசு:
- அறிவியல், மொழிப்பயிற்சி, வரலாறு, உலகச் செய்திகள், சிறுகதைகள், துணுக்குகள், புதிர்கள் முதலிய எண்ணிறந்த செய்திகள்.

உங்கள் குழந்தைகள் படிக்கின்றனவா?

இல்லையேல் அவர்களை இன்றே உறுப்பினர்களாக்குங்கள்.

ஆண்டுக் கட்டணம் 2 உருபா.

தமிழ்ச் சிட்டு: கடலூர்-1.

பாடல்களில் வில்யாழ், சீறியாழ், பேரியாழ் என்றும், சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் பெருங்கதையிலும் சீவக சிந்தாமணியிலும் சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ் என்றும் குறிப்பிடப்பட்டு மறைந்துவிட்ட அந்த யாழ்க் கருவியை மீண்டும் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தியவர் விபுலாநந்த அடிகள். அறிமுகப்படுத்தியது அவர் எழுதிய யாழ்நூல்.

"கடல்வாய்ப் பட்டனவும் காலத்தின் மாறுதலினாலே மறைந்து போயினவுமான நூல்கள் மிகப்பல. அந்த நூற்பெயர்களைக் கூறிப் பழமை பாராட்டுவதோடு அமைந்திருப்பது கூடாது. முன்னிருந்த கலைச் செல்வத்தை மீட்டும் பெறுதற்கு முயலவேண்டும்" – என்ற முயற்சியின் பயனாக எழுந்த நூல் யாழ்நூல். நூல் ஆசிரியரே குறிப்பிடுவதுபோல், இளங்கோவடிகள் புனைந்தளித்த தெய்வ மாக்கதையாகிய சிலப்பதிகாரத்தின் மாட்சியினை இயன்றவரை உலகுக்குத் தெரிவிக்கும் பெருவிருப்பத்தோடு எழுதப்பட்ட நூல் யாழ்நூல். "சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையினுள்ளே யாழ் ஆசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாக" இயற்றப்பட்ட நூல் யாழ் நூல். "ஆயிரம் நரம்புயாழின் கணக்கினைக் கண்டறிந்து அவ்வியாழினை மீண்டும் அமைப்பதற்கு வேண்டிய குறிப்புகளை ஐயந்திரிபு அற எடுத்துரைக்கும்" நூல் யாழ் நூல். அரங்கேற்றுக் காதையில் மாதவி இசைத்த யாழ்க் கருவியின் அமைப்பும் பாடிய இசையின் அமைப்பும் இவையென விரிவாக எடுத்துக்காட்டும் நூல் யாழ் நூல். "கோடபதி எனவும் சகோட யாழ் எனவும் பெயரெய்தி விளக்க முற்றிருந்த, ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியென்னும் யாழ்க் கருவியின் இசை தமிழகத்தில் மீட்டும் பரவத் துணைபுரிய வேண்டுமென்னும் உள்ளக்கிடக்கையால் உருவாக்கப்பட்ட ஆராய்ச்சி நூல் யாழ் நூல், தமிழுக்கெனத் தனி இசை கிடையாது என்று சொல்லுமளவுக்குத் தமிழிசை மறைந்து போன நிலையில், தமிழர்க்கெனத் தனியிசை உண்டு. பிறமொழியிலுள்ள இசைக்கு அடிப்படையாக இருந்ததும் இருப்பதும் தமிழிசைதான் என்னும் உண்மைகளை எடுத்துரைக்க எழுந்த நூல் யாழ் நூல்.

இன்று தமிழ் நாட்டில் நடைபெறும் இசை நிகழ்ச்சிகளையும் இசைத் தொடர்பாக வழங்கிவரும் கலைச் சொற்களையும் பிறநாட்டார் வந்துபார்த்தால் என்ன நினைப்பர்? தமிழர்க்கும் இசைக்கும் தொடர்பே இல்லை என்றுதான் நினைப்பர். அந்த அளவுக்கு இசைத் துறையில்

இருந்த தமிழ்ச் சொற்கள் எல்லாம் மறைக்கப்பட்டுப் பிறமொழிச் சொற்கள் உலவவிடப் பட்டிருக்கின்றன. அப்படி மறைக்கப்பட்டு விட்ட தமிழ்ச் சொற்களை நமக்கு நினைவூட்டுகிறது விபுலாநந்தரின் யாழ் நூல்,

'ச, ரி, க, ம, ப, த, நி'– என்னும் ஏழு எழுத்துகளால் குறிக்கப் படுகின்ற, சட்சம், இரிசபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிசாதம் என்னும் ஏழு இசைகளுக்கும் தமிழில் என்ன பெயர்கள் தெரியுமா? இளி, விளரி, தாரம். குரல், துத்தம், கைக்கிளை, உழை என்பன. இராகம் என்னும் வடசொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் என்ன தெரியுமா? நிறம் என்பது. உரையாசிரியர்கள் பல விடங்களில் "நிறந் தோன்ற" என்றே வழங்கி யிருக்கின்றனர். இசை என்பதற்கும் பண் என்பதற்கும் பெயர்க்காரணம் என்ன? பாவோடு நிறத்தினை(இராகத்தை) இசைப்பதால் இசை. பண்ணப்படுவதால் பண். மந்தரம், மத்திமம், தாரம் என இன்று வழங்குவதைப் பழந்தமிழர் எவ்வாறு கூறி வந்தனர்? மெலிவு, சமன், வலிவு எனக் கூறிவந்தனர். ஏற்றம், இரக்கம் என்னும் பொருளில் ஆரோகணம், அவரோகணம் என்று இன்று சொல்லப்படுகின்றனவே அவற்றிற்குத் தமிழில் பெயர் உண்டா? உண்டு. 'ஆரோசை' (ஆர்–நிறைதல்; ஓசை) 'அமரோசை (அமர்–அமர்தல்; ஓசை) என்பவைதாம் தமிழில் வழங்கிவந்த பெயர்கள். முன்னால் 'அலகுகள்' என்று வழங்கி வந்தவைதாம் இன்று 'சுருதிகள்' என்று சொல்லப்படுகின்றன.

கருவிகள் பல ஒருங்கியைந்து ஒலிப்பதனை இன்று நாம் 'Orchestra' என்று ஆங்கிலத்தில் சொல்கிறோம் அல்லவா? இந்த "ஆர்ச்செச்ட்ரா" தமிழ் நாட்டில் இருந்திருக்கிறதா? இருந்திருக்கிறது. இருந்திருந்தால் அதற்குத் தமிழில் பெயரென்ன? அதற்குத் தமிழில் 'ஆமந்திரிகை' என்று பெயர். சான்றுகள் உள்ளனவா? உள்ளன. சீவக சிந்தாமணிப் பாடல் ஒன்றின் (675)உரையில் நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள் நூற்பாவில் இந்த 'ஆமந்திரிகை' (Orchestra) வருகிறது. குழலோசைவழி, குழலோசைக்கு இசைய யாழ் ஓசை எழத் தண்ணுமையும் முழவும் சேர்ந்து முழங்கும் ஆமந்திரிகைபற்றி அதில் சொல்லப்படுகிறது.

"குழல்வழி யாழ் எழீஇத் தண்ணுமை பின்னர்
முழவு இயம்பல் ஆமந்திரிகை."

சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையிலும் இளங்கோ வடிகள் இந்த ஆமந்திரிகையை நமக்குக் காட்டுகிருர். குழலும் யாழும் தண்ணுமையும் முழவும் ஒன்ருேடொன்று இசையக் கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை என்கிருர்.

''குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந்திரிகை''

இத்தகைய செய்திகளை யெல்லாம் நமக்கு நன்கு எடுத்துச் சொல்கிறது யாழ் நூல்.

கடைக்கழகக் காலத்தில் தொகுக்கப்பட்ட தொகை நூல்களில் ஒன்று பரிபாடல் என்பது, அந்தத் தொகை நூலிலும் இன்று நமக்கு ஒரு பகுதிதான் கிடைத்திருக்கிறது. ''கிடைத்த பகுதியினை நோக்கின் தலைக்கழகத்தார் புனைந்த எண்ணிறந்த பாடல்கள் எத்துணைவளம் சிறந்தனவோ என எண்ணி உளமுருக வேண்டியிருக்கிறது,'' என்கிருர் விபுலாநந்த அடிகள். இன்று வானொலியில் மெல்லிசைப் பகுதியில் கேட்கிறோமே,-பாடலை இயற்றியவர் இன்னர்,பாடியிருப்பவர் இன்னர், மெட்டமைத்தவர் இன்னர்-என்று, அப்படிப் பரிபாடலில் உள்ள ஒவ்வொரு பாடலின் அடியிலும் பாடல் இன்ன துறையைச் சேர்ந்தது. பாடினவர் இன்னர். பண்ணின் பெயர் இது. இசைவகுத்தவர் இன்னர்-என்னும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக செவ்வேளைப் பற்றிய பாடல் ஒன்றின் கீழ் தரப்பட்டுள்ள விளக்கங்கள் இவை: பாட்டின் துறை-கடவுள் வாழ்த்து; பாடியவர் பெயர்-குன்றம் பூதனர். இசைவகுத்தவர் பெயர்-மருத்துவன் நல்லச்சுதனர்; இசை-பண் பாலையாழ்.

'கருநாடக சங்கீதம்'என்றும் 'சாத்திரீய சங்கீதம்' என்றும் நடைபெறும் இசை நிகழ்ச்சிகளில் பாடுவோர் இன்றும் எப்படித் தொடங்கிப் பாடுகிருர்கள்? 'தன்னன்ன தன்னன்னை, என்றுதானே தொடங்கிப் பாடுகிருர்கள். ஏன் அப்படித் தொடங்க வேண்டும்? ''கன்னன்ன கன்னன்னை'' என்ருே, ''பன்னன்ன பன்னன்னை'' என்ருே, ''சன்னன்ன சன்னன்னை'' என்ருே தொடங்கிப் பாடுவதில்லையே! ஏன்? நெடுங்காலமாகப் பாடி வருகின்ற பழக்கம் அது. அந்தப் பழக்கத்தை அவர்களால் மாற்ற முடியவில்லை, அந்தப்பழக்கம் எப்படி ஏற்பட்டது?

"தென்ன தென்ன தென" என்று பாடி வந்ததுதான், "தன்னன்னன" என்று சற்று மருவியிருக்கிறது. தென்னன் என்பது தென்திசை யாண்ட பாண்டியன் பெயர் ஆதலாலும் அவன் இசை வளர்த்தவன் ஆதலாலும் அவன் பெயரையே விளித்து இசையில் வைத்துப் பாடும் வழக்கம் உண்டாயிற்று என்று கருதுவது பொருந்தும்" என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த இரா. இராகவையங்கார் என்பவரே, தாம் எழுதியுள்ள, தமிழ் வரலாறு என்னும் நூலில் கூறுகிறார்.

இப்படியெல்லாம் தமிழுக்கும் இசைக்கும் எவ்வளவோ நெருங்கிய தொடர்பு இருந்தும்,இசையை வளர்த்தவர்கள் தமிழர்களாக இருந்தும், தமிழரின் விழிப்பற்ற தன்மையால் தமிழுக்கும் இசைக்கும் தொடர்பே இல்லையென்று பிறர் சொல்லுமளவுக்கு மறைந்துபோக இருந்த தமிழிசையை மறையாமல் நிலைத்து வாழச் செய்துவிட்டவர் விபுலாநந்த அடிகள். அவர் இயற்றிய யாழ் நூல் என்னும் ஆராய்ச்சி நூல் வேறு எம்மொழியிலாவது வேறு எந்நாட்டிலாவது எழுதப்பட்டிருந்தால் அது பிற மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுப் பாராட்டப் பட்டிருக்கும். ஆனால் இத்தகையதோர் அரிய ஆராய்ச்சிநூல் தமிழில் எழுதப்பட்டுவிட்டதால் அஃது இன்று இருக்குமிடம் தெரியாமல் இருக் கிறதே என்றுதான் வருந்த வேண்டியிருக்கிறது.

"ஐயிரண்டு ஆண்டுகளாக நேரங்கிடைத்த போதெல்லாம் முயன்று" இவ்வாராய்ச்சி நூலினை எழுதிமுடித்த விபுலாநந்த அடிகள் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருப்பின் மேலும் இசைபற்றிய ஆராய்ச்சி நூல்கள் சில நமக்குக் கிடைத்திருக்கும் அவரே அந் நூலில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். "யாழ் கருவி, ஒழிந்த பிற இசைக் கருவி களைக் குறித்தும் இசையிலக்கணம், இசைப் பாட்டிலக்கணம், இசைக் கலை வளர்ச்சி என்னும பொருள்களைக் குறித்தும் ஆராய்ந்து கண்ட முடிவுகள் சில கையில் உள்ளன. காணவேண்டியவை இன்னும் பல உள. இறைவன் திருவருள் பாலிப்பானாயின் ஏற்ற காலத்திலேயே அம முடிவுகள் மற்றொரு நூலாக வெளிவருதல் கூடும்", என்கிறார். ஆனால் தமிழ் நாட்டின் தவக்குறை என்றுதான் சொல்லவேண்டும்–யாழ் நூல் வெளிவந்த உடனே அவர் மறைந்து விட்டார். அவர் வழி நின்று தமிழிசைபற்றி ஆராய்ந்து மேலும் பல செய்திகளை உலகுக்கு அறிவிக்க யார் எப்போது முன் வரப்போகிறார்களோ தெரியவில்லை! O

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னாலென்ன?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு !

புரிந்து கொள்வீர் !

—வைகறை-தேசுமுகிப்பேட்டை.

புரைநெளியும் பொய்யுடலைப் பொலியக் காட்டிப்,
புழுதிநிறை இருள்மனத்தை மறைத்து வைத்துக்,
கறைபடிந்த வாழ்க்கைதனை ஒளித்தே, அன்பில்
கவறாட்டம் ஆட்டுவிக்கும் தீயர் போக்கை;
உரைசொல்லப் போதாது! நேரம் போதா
துவமைக்கோர் அளவில்லை; நேர்மை தன்னை
மறைத்திங்கே கூப்பாடு போட்டே நாளும்
மாண்பிழந்து திரிகின்றார் தமிழர் என்றே!

மார்தட்டிப் பேசுகின்றார்! மேடை தோறும்,
மனமுவந்து முழக்கங்கள் செய்கின் றாரே!
"யார்இந்தப் பேடியர்கள்? என்ப தைநாம்
அறிந்திடவும் முடியாத நிலையில், நம்மைப்
பார்வையிலே திரையிட்டு மறைக்கின் றார்!என்
பகட்டாகத் திரிகின்றார்! வெட்கம், வெட்கம்!
சீர்மிகுந்த செந்தமிழீர்? விழிப்புக் கொள்வீர்!
சிறுத்தையென வலிகொண்டே முனைந்தெ திர்ப்பீர்!

"கல்லாகச் சமைத்திட்ட தமிழர் உள்ளம்
கனன்றெழவே வேண்டுமின்றே! உறக்கம் நீங்கிப்
பொல்லாத வஞ்சகர்தம் பிடியை நீக்கிப்
பொலிதமிழைக் காத்திடவே வேண்டும் இன்றே!
வில்லோடு புலிக்கொடியும் மீனும் நன்றே
வீற்றிருக்க உச்சியிலே பறக்க வேண்டும்!
நல்லாரே! நற்றமிழீர்! திரண்டு வாரீர்!
நல்லாட்சி நாம்அமைப்போம்! புரிந்து கொள்வீர்!

இளைஞர் வாரீர்! கருப்பூர்-மு. அண்ணாமலை (புலவர் நிறைநிலை

திரைப்படந்தான் இந்நாட்டு மக்கள் தம்மை
சிறைபிடித்துக் கொண்டதடா! இளமை முற்றி
நரைபிடித்து வறண்டதடா தமிழர் வாழ்க்கை
நல்லதொரு கரணியமும் உண்டு சொல்வேன்!
புரையின்றி இந்நாட்டார் வாழ்வுப் பாதை
புவியினிலே உயர்ந்தோங்கும் வழிகள் காணக்
கரையின்றிக் கலைபலவும் கற்றல் வேண்டிக்
கல்லூரி அனுப்பிடிலோ காதற் பாடம்,

கற்றன்றோ வருகின்றார். இளைஞர் எல்லாம்
கடமையறத் திரிகின்றார்! பெண்கள் பின்னால்
புற்றீசல் மொய்ப்பதுபோற் தொடர்ந்து சென்று
பேசாத பேச்செல்லாம் பேசிப் பேசிச்
சுற்றித்தான் அலைகின்றார் நாட்டிற் கீதால்
தினையேனும் பயனுண்டா? மேலை நாட்டார்
முற்றறிந்து பறக்கின்றார் வான்கி ழித்து
முழுமதியைச் சிறைப்பிடிக்கும் எண்ணங் கொண்டே!

மூவாறு முழங்கொண்ட சேலை தன்னை
மும்முழமாய்க் குறைப்பதிலே வளர்ந்து விட்டார்!
தாவும்நாய்க் குட்டிக்கும் பிறந்த நாளைத்
தவறுமற் கொண்டாடக் கற்றுக் கொண்டார்!
தேவாரத் தீந்தமிழைத் தொலைத்துப் பல்லார்
தெளிவில்லா மொழியனைத்தும் ஒன்றுய்ச் சேர்த்து
நாவாரக் குழப்புவதில் பெருமை கண்டு
நலிவினையே தனக்கணியாய்ப் பூண்கின் ருரே!

படத்தினிலே நடிப்போரின் பேரால் நாட்டில்
பலமன்றம் தெருவெங்கும் வைத்த பின்னே
மடத்தனமாய் அதன்பேரில் அடித்துக் கொண்டு
மானமின்றிக் காவலர்கள் இழுத்துச் செல்லும்
இடத்தினையே பிடிப்பதற்கு முந்து கின்ருர்!
இன்றமிழைப் பேணிடவே நினைத்தா ரல்லர்!
தடத்தினிலே முள்கிடக்க அதைஎ டுத்துத்
தலைகுத்திக் கூர்மைதனைப் பார்க்கின் ருரே!

''கொத்துகின்ற கிளிமொழியாள் முகிலைக் கண்டு
கூத்தாடும் கோலமயில் இவள்தான்! என்றும்
பொத்தகத்தில் காண்பதுவும் காலை மாலை
பூதூவி வழிபாடு செய்து நெஞ்ச
முற்றத்தில் வைத்திடுவோம்'' என்றும் கூத்தி
முழுப்படத்தை வணங்குவதி லோங்கி விட்டார்!
முத்தனைய தமிழ்ப்பண்பை விட்டுத் தம்மின்
முகத்தினிலே கரிபூசித் திரிகின் ருரே!

பார்க்கக்கண் கூசுகின்ற கூத்தி யாளைப்
பண்பழிக்கும் முறைதனிலே படமாய்ப் போட்டே
ஆர்க்கின்ற முடைநாற்ற இதழை வாங்க
அஞ்சவில்லை துஞ்சவில்லை மேலும் மேலும்
பூக்கத்தான் காய்க்கத்தான் விட்டு விட்டார்!
பொசுக்கத்தான் நசுக்கத்தான் நினைத்தா ரல்லர்!
பார்க்கத்தான் அழகெனவே சுற்றித் தாவும்
படுதீயில் மெய்பொசுக்கிக் கொள்கின் ருரே!

பண்பட்ட முறைதனிலே எழுதிப் பேசிப்
பண்பாட்டை உயிர்போலக் காத்து, வாழ்வில்
மண்பட்டு மாய்ந்துவிட்ட இந்த நாட்டை
மனம்பட்ட முறையிலெல்லாம் ஆக்கு வின்றி
விண்பட்ட மதிபோல உலகில் ஈதே
விளையட்ட நிலமாக்கிக் கொணரு தற்கே
புண்பட்ட திருமறவர் வழியில் வந்த
பொன்பட்ட தமிழினரே வாரீர்! வாரீர்!! O

வேட்கை

தேனி–இரும்பொறை.

கதிரவன் உருற்றக் கடலலை உலர்ந்து
காற்றலை யாகியும், கான்வெளி மிதந்தும்,
நெடுங்குன் றணைத்தும், நறுமலர் நுகர்ந்தும்,
நீள்விசும் புலவியும், நிலவுடன் குலவியும்
போதரும் முகிலே! பொழியும் மழையே!
தீதற உன்போல் உலகில் திரியவும்,
உயிரினம் புரந்தென் உயிரழித் திடவுமே
விரும்பினன். இயலா தேங்கினன்
பருவுடற் பழுவால் பாரினில் யானே! O

பாடு! பாடு!!

–மலரன்பன்

வெண்ணிலவைப் பாடியது போதும்! வான
விரிகதிரோன், விண்மீன்கள், சோலை, காதல்
பெண்ணினத்தைப் புகழ்ந்ததெலாம் போதும்! தென்றல்
பைந்தமிழின் பாட்டிங்கே இனியும் வேண்டா!
கண்ணற்ற ஒருகூட்டம் ஏழை மக்கள்
கதறிடவே பதறிடவே சூழ்ச்சி செய்தே
எண்ணற்றோர் வாழ்க்கையினைக் கெடுக்கும் கேட்டை
எழிற்றமிழில் இன்னிசையாய்ப் பாடு! பாடு!

இளமையிலே எழுகின்ற காதல் மாட்சி
எழுதியதும் போதாதா? நிறைய உண்டே!
வளமையினைக் கொண்டாநாம் வாழு கின்றோம்?
வாழ்க்கையிலே காதலொரு கேடா? பஞ்சம்

துளைத்தெடுக்க ஓடாகி வயிறும் ஒட்டித்
துன்பத்தை அணைத்திருக்கும் ஏழை வாழ்வில்
களைநீக்கத் தளைநீக்கப் பாடு! நொந்து
கற்பனைகள் தீயாகி வெந்து பாடு!

மலர்க்கூட்டம் மட்டும்தாம் உனது நாவில்
மணம்வீசிக் கருவாகி உருவெ டுக்கும்!
அலறுகின்ற ஏழையர்கள் கொடுமை செய்யும்
அழிமனத்தார் முன்னாலே துன்பம் பெற்று
வலைப்பட்ட மானுக நெருப்பில் சிக்கி
வாடுகின்ற பூவாகப் புரண்டு துள்ளும்
அலைகடலை விட்டுவந்த மீனாய்ச் சாகும்
அழிநிலையைச் சீராக்கப் பாடு! பாடு!!

வேண்டும்!

கருவை கிழான்; அரக்கோணம்

முத்துதரும் கத்துகடல்; வாழைத் தோட்டம்;
முற்றியதீங் கனிகுலுங்கும் சோலைக் கூட்டம்;
எத்தனையோ நூலகங்கள்; இயற்கை மாட்சி;
இத்தனையு மிங்கிருந்து பயனென் கண்டோம்?
புத்தமிழ்தச் செந்தமிழின் மாட்சி எங்கே?
பூந்தமிழைக் காத்ததமிழ்க் கழகம் எங்கே?
எத்தர்களின் சூழ்ச்சிக்கே பட்ட வந்தோ!
ஏமாறிப் போயினரோ தமிழர் இந்நாள்?

தாழ்ச்சியுறு தமிழ்நாட்டி லெழுச்சி வேண்டும்;
திறமிழந்த உடலினிலே வன்மை வேண்டும்;
சூழ்ச்சிகளைத் தூளாக்குந் தோள்கள் வேண்டும்;
தொல்மறவர் பெருந்துணிவு நமக்கு வேண்டும்;
ஆழ்ந்தாய்ந்த அறிஞர்களைப் போற்ற வேண்டும்;
ஆட்சிமொழி தமிழ்மொழியா ஆதல் வேண்டும்;
தாழ்ச்சியிலாத் தமிழ்வாழ உயிர்கொ டுக்கத்
தயங்காத காளையர்கள் வேண்டும் வேண்டும்! O

பிரிவே தேவை.

முல்லைவாணன்–திருமுல்லைவாசல்

கல்லைப்போல் மண்ணைப்போல் காணும் மக்கள்
கடமையினை உணராத தெருவாழ் குக்கல்!
புல்லைப்போல் வாழ்ந்தாலும் பயனே இன்றிப்
புரிகின்ற வினையாலே எல்லாம் சிக்கல்!

வில்லைப்போல் வளைந்தாலும் அம்பாய்ச் சென்று
வினையறுக்க வேண்டுமதே சிறப்பு நல்கும்!
நெல்லைப்போல் பயனளிக்கார் கருக்கா யாகி
நிலம்மடிந்து வாழ்வதுமேன்? சாதல் நன்றே!

விழிச்சிக்கல் கொண்டுவிட்டால் பார்வை யில்லை;
வினைச்சிக்கல் கொண்டுவிட்டால் உயர்வே இல்லை;
வழிச்சிக்கல் ஆகிவிட்டால் முடிவே இல்லை;
வலைச்சிக்கல் பட்டுவிட்டால் வருவாய் இல்லை;
மொழிச்சிக்கல் புரிகின்றார் வடவர், நாட்டு
முன்னேற்றம் விரும்புகின்றார் விளைதல் உண்டோ?
மொழிச்சிக்கல் இலையென்றால் ஒருமை வேண்டும்.
'முடியாதே' என்றிட்டால் பிரிவே தேவை!

உயிர்தமிழ்தான்! உலகறிவு தந்து நம்மை
உயர்த்தியதும் ஆங்கிலந்தான்! இதைவி டுத்துப்,
பயிர்கொன்று களைவளர்த்தல் போலே இந்திப்
பருமொழிக்கு வரவுரைப்பார்; வாழ்த்தல் செய்வார்!
மயிர்கழிந்த பின்னதற்கு மாட்சி யுண்டோ?
மருள் இந்தி குரல்வளையை நெறித்தல் கண்டோம்!
துயர்பறித்து நமைநலம் ஏன் கொல்லல் வேண்டும்?
துடித்தெழுந்தால் இந்திப்பேய் புகைந்தே போகும்!

மனம் நோவுறுமே !

—கசந்த வாழ்வன்

விண்ணீர்த் துளியென விராஅய துயரத்துக்
கண்ணீர்த் துளிசிந்திக் கலங்கிலை என்றோழி!
காலையிற் செல்லுமுன் தனிவா யுனக்குரைத்த
வேலை யெனக் குரைத்து வெளியூர்ச் செல்பிரிவின்
ஓலம் தவிர்கென்றார் காதலர், நானதற்குக்

காதலர் கைகோத்துக் கடற்கரை செல்காட்சி
மாதவள் கண்டு மனம்வெந்து வருந்தாளோ?
அண்டையர் தம்மனைவிக் கம்முல்லை மலர்செறிந்த
செண்டெடுத் தணிசெய்யக் கண்டுநீர் சிந்தாளோ?
வேலையின் பெயர்கணவர் வீடடைய விழிமலர்த்திப்
பாலென நகைமனைகண் டழெநஞ்சம் பதறுளோ?
எனப்பலவும்,

அடுக்கி யுரைத்தேன் ஆனாலுங் காதலர்
கடமை யுரைத்துக் கருமம் முடிந்ததும்
சுணங்காமல் வருவதாய்ச் சொல்லினர் காலத்திற்
கிணங்குதல் வேண்டுமே, யிளையோய்!
சிணுங்கல்! அறினவர் சிதைவுறு நெஞ்சே!

செந்தமிழின் செப்பம் குலைப்போர். பொ. முனியப்பன்.

"கத்தூரி ரங்கன்" யெனுங்கய வன்ஒருவன்
பித்தேரி யேபிதற்றிக் கொட்டினான்—மெத்தச்
சிறந்த தமிழுக்கு 'வேலி'யெனும் ஒன்றால்
இறந்தமொழி காக்குமித ழில்.

"சிப்சி" யெனுஞ்சிறு வன்ஒருவன் கற்றவர்
ஒப்பிடா ஒன்றினைச் செப்பினான்—எப்போதும்
வேற்றுமொழி யைக்கலந்தே தந்திடும் 'தீப'மென்னும்
ஆற்றலில் திங்களித ழில்

வடமொழியை வாரினால் தான்தமிழ் வாழும்
திடமாய் வளரும்,என் றெல்லாம்—மடத்தனமாய்க்
கூறிவட வர்க்கடிமை யாய்வயிறு காத்திடும்
நாறிய வாழ்க்கையரி வர்.

செப்பம் மிகுந்தநம் செந்தமிழ்இ லக்கணத்தைத்
தப்பின்றிக் கற்றபின்னுந் தாவியே—அப்புகின்றார்
செத்த வடமொழியைச் சேர்த்து, தனித்தமிழைக்
கொத்திச் சிதைக்கின்றார் கொண்டு.

புள்ளிஎழுத் துக்கள் தமிழில் இருப்பது
கள்ளிமுள் போன்றிருக் கின்றதாம்—துள்ளியே
பாய்கின்றான் புள்ளியை நீக்க; மறுப்பவரால்
சாய்ந்திடுமாம் நந்தமிழின் வாழ்வு.

மொழியின் முதலில் 'ர'வையும் 'ட'வையும்
ஒழிக்க முயன்ற அனைத்தும்—அழிந்ததாம்
முன்னேற்று இச்செயலில் ஈடுபட்டோர் தன்னறிவில்
பின்தங்கி னாராந் தனித்து.

வேற்று மொழியெழுத் துக்களை மாற்றமின்றி
ஏற்றுக்கொண் டாலன்றி இன்றமிழ்-ஆற்றலுடன்
போட்டியிட்டு நல்வளர்ச்சி பெற்றேங்கா தென்றுரைத்தே
காட்டுகின்றான் தன்கயமை காண்!

"சிப்சி"யா னுக்குச்"சப் பான்"என் றுரைத்திடில்
சப்பா திருக்கத்தான் கற்றானும்-எப்போதுங்
கண்டதைச் சப்பிவாழ் வான்கருத்து ரைக்கின்றான்
என்றும் வடமொழிசேர் என்று.

அன்றுபா லில்தண்ணீர் சேர்த்தபின் தான்தனிப்பால்
என்றுசொல் லத்தொடங்கி னேம்அதுபோல்-என்றும்நம்
இன்றமிழில் செத்த வடமொழியைச் சேர்த்தாரோ
அன்றெழுந்த தேதனித்த மிழ்.

இஃதுணராப் போலிகள் ஆடுகின்றார் பாடுகின்றார்
எஃகுள்ளங் காட்டியே சாடுகின்றார்-அஃறிணை
போல அறிவுகொண்டி வர்தனித்த மிழ்ப்பற்றை
ஏளனஞ்செய் கின்றார் இளித்து. O

அன்பளிப்பு

தென்மொழி வளர்ச்சியில் நாட்டமும் அக்கறையும் கொண்ட அன்பர்கள் கீழ்க்காணுமாறு அன்பளிப்பு வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நம் நெஞ்சுகந்த நன்றியும் வாழ்த்துகளும் உரியவாகுக.

1.	திருவாட்டி. நா. ஆண்டாள்	-நெய்வேலி.	3-25
2.	திரு. அ. தெ. இரகோத்தமன்	-அறகண்டநல்லூர்.	5-00
3.	திரு. மு. மா. கணேசன்	-மாப்படுகை.	5-00
4.	திரு. இரா. முத்தையா	-ஒரத்தநாடு.	2-00
5.	புலவர் ந சுந்தரேசன்	-ஆவூர்.	50-00
6.	திரு. கோ. மனோகரன்	-ஊத்துக்குளி.	5-10
7.	திரு. தாமரை	-பெங்களூர்-2.	5-00

அமைச்சர்.
தென்மொழி, கடலூர்-1.

மக்களவை

தமிழின் விடிவுக் காலம்.

தமிழ் கெழு வேந்தே! தமிழனது அடிமையும் நம்மொழி சீர் குலைக்கப் படுவதையும் காணுங்கால் கண்ணீர் வடிகிறது; கல்வியின் பால் நோக்குச் செல்வதில்லை. எப்படியாவது தமிழையும் தமிழரையும் விடுவிக்க வேண்டிய பொறுப்பு இன்று உங்கள் தலையில் விழுந்து விட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள். பெரியாரும் அண்ணாவும் தம்மால் இயன்ற அளவு இப்பணியில் உழைத்து விட்டனர். எனவே புதிய தலைமுறைக்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். நாம் இனிமேல் மிகையாக அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதோ அவர்கள் தவற்றைச் சுட்டிப் பழிப்பதோ சரியாகாது.

நான் உறுதியாக நம்புகிறேன். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் பரவாத நிலையில் மெய்யான விடிவு தமிழகத்திற்குப் பிறக்கப் போவதில்லை. தென்மொழி படிப்போர் குறைந்து வருகின்றனரோ என்று எண்ணி அஞ்சுகிறேன். தென்மொழி அன்பர்கள் மெய்யாகவே தமிழ்ப் பற்று உள்ளவர்களா அல்லது போலியரா என்பது எனக்குப் புரியவில்லை. தென்மொழி யன்பர்கள் மெய்யாக இனமொழிப் பற்று உடையவர் என்றால் தென்மொழி என்றோ தமிழகம் முழுவதும் பரவியிருக்குமே! ஒவ்வொரு தென்மொழி யன்பரும் குறைந்த அளவு பத்துப் பேரையாவது உறுப்பினராக்க முயலவேண்டும். பிற கடமைகள்:

இன்று நாட்டுப் புறங்களில் ஏட்டுச் சுவடிகள் பல காணப்படுகின்றன. பார்ப்பனரின் அரிப்புகள் திருச்சி, மதுரை, திருவரங்கம் போலும் கோயில் நகரங்களில்தாம் அன்றுமுதல் இன்றுவரை இருந்தனவே அன்றிப், பட்டிக் காடுகளில் அவர்கள் காலூன்றவில்லை. இத்தகு நாட்டுப்புறங்கள் குறுநில மன்னர்களின் பகுதிகளாக இருந்திருக்கின்றன. முகமதிய, ஆங்கிலப் படையெடுப்புகள் கூட இந்த நாட்டுப் புறங்களில் எத்தகைய உந்தல்களையும் செய்யவில்லை. எனவே காணப்படும் ஏட்டுச் சுவடிகளில் நல்ல தமிழ்ப்பண்பும் மறமும் காணக்கூடும். சான்றாகப் பாஞ்சலங்குறிச்சி, பாகனேரிப் பகுதி சார்ந்த சிவகங்கைச் சீமை, மதுரை மாவட்டத்தில் உள்ள பிரான்மலை எனப்படும் மல்லான் கோட்டை நாடு இவற்றில் எல்லாம் மறஞ்செறிந்த கதைகளும் நாட்டுப் பாடல்களும் பேசப் படுகின்றன.

இந்த ஏட்டுச் சுவடிகளைத் தொகுக்கவும், நாட்டுப் பாடல்களைத் தொகுக்கவும், கதைகளைத் தொகுக்கவும் தென்மொழி வாயிலாக வேண்டிக் கொள்ளுங்கள். இன்றும் தமிழ் சாகவில்லை; பழமை மணங்கமழும் அரிய இலக்கியங்கள்(புறம் அகம் இவற்றினும் சிறந்தனவாகக்கிடைக்கலாம்) இக்கடமைக்குத் தென்மொழி யன்பர் தம்மைப் படையல் செய்வரா?

26-10-67 தமிழ் வழுதி, மதுரை.

ம. பொ. சியின் மொழிக்குழப்பம்.

ஆசிரியர் அவர்களுக்கு! இந்த ம. பொ. சி யாரை நாம் நன்கு அறிவோம்; தமிழக மக்களும் ஒருவாறு அறிவார்கள். இவர் இந்திக்கு வால்பிடிப்பவர் என்பதை இவர் மூன்றாண்டுகளுக்கு முன் நடத்திய "ஆங்கிலத்தை அகற்று; ஆங்கிலம் பிறர் மொழி; அது நமக்குத் தேவையில்லை; அரசியல் சட்டத்தைத் திருத்து" போன்ற எதிர்ப்புக் குரல்களைத்தமிழகத்தில் ஊர்தொறும்-வீதிதொறும் முழக்கியதிலிருந்து அறியலாம்.

இவர் ஆரியப் பார்ப்பனர்களுக்கு ஒத்து ஊதுபவர் என்பதை அவர் சொற்பொழிவுகளிலிருந்தும்-அவர் எழுதிய நூற்களிலிருந்தும்-அவர் கொண்டுள்ள ஆரியத் தொடர்புகளிலிருந்தும் நன்கு அறிந்து கொள்ளலாம். அவரது அரசியல் வாழ்க்கை எங்குத் தொடங்கி-எப்படி எப்படி நகர்ந்து-இறுதியில் எங்கு-எந்த நிலையில் நிற்கின்றது என்பதையும் நாமெல்லாரும் தெளிவாக அறிந்து வருகிறோம்.

இந்தப் பெரியவர் கடந்த 29-10-67 அன்று சென்னை 'ஆபட்சுபரி மாளிகை'யில் நடந்த தி. மு. க. மாணவர் 'கூட்டுடைமைப் பாதுகாப்பு' மாநாட்டில் பேசும்பொழுது அவரது மொழிக் கொள்கையை ஒரு குழப்பு குழப்பி விட்டார். அந்தக் குழப்பமறியாக் கூட்டத்தினரும் இடைவிடாது மூன்று நிமையம் கைதட்டி ஆரவாரித்தனர். அவர் தமது பேச்சில் குறிப்பிட்டது, ''ஆங்கிலம் இடைக்காலம்வரை நீடிக்க வேண்டும்; ஆனால், அது நிலையாக நீடிப்பதை நான் விரும்பவில்லை—விரும்பவும் மாட்டேன். அதுபற்றி அண்ணாத்துரை—இராசாசி போன்றவர்களிடம் தனித்துப் பேசவேண்டும். தமிழ்நாட்டில் எங்கும் எல்லாம் தமிழில்தான் நடைபெற வேண்டும்'' என்பதுதான்.

இராசாசியிடம் தமிழைப்பற்றிப்பேச இராசாசி என்ன தமிழறிந்த சான்றோரா? அல்லது புலமை பெற்ற புலவரா? தமிழ் வளர்ச்சிக்கும் இராசாசிக்கும் தொடர்பு உண்டா? தமிழ்க் கேடர்களில் அவரும் ஒருவரல்லரா? தமிழகத்தில் அவராலன்றோ இந்தி நுழைந்தது. அவர் யார் தமிழுக்கு முடிவெடுக்க? ம. பொ. சி தான் தமிழுக் கதிகாரியா? இவர்களால்தான் தமிழ் வாழ்கிறதா—வளர்கிறதா? ம. பொ. சி யின் மொழிக் கொள்கைதானென்ன?

நமது கொள்கை, தமிழகத்திற்குத் தமிழும், பிற மாநிலத் தொடர்புக்கும்—நடுவணரசுத் தொடர்புக்கும்—உலகத் தொடர்புக்கும் ஆங்கிலமும், ஆக இரண்டு மொழிகளே போதுமானவை; இந்தி மொழி நமக்கு வேண்டாத மொழி; அஃதை ஒருபோதும் ஏற்க மாட்டோம்; மும்மொழித்திட்டம் ஒற்றுமையைக் குலைக்குந் திட்டம்; இந்திய அரசியல் சட்டத்தை திருத்தத் வேண்டும் என்பதே. இதனை வன்மையாயும்— உறுதியாயும் கூறிவருவதோடு, அதனால் ஏற்பட விருக்கும் விளைவையும் ஏற்றுக் கொள்ள முனைந்து நிற்கிறோம்.

இந்த நேரத்தில் ம. பொ. சி. போன்றவர்கள் மேன்மேலும் மொழிக் குட்டையைக் குழப்பி வருகின்றார்கள். ஒன்று, இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்திதான் இருக்கவேண்டும். ஆங்கிலத்தை அகற்ற வேண்டுமென்றோ; அல்லது ஆங்கிலந்தான் நிலையாக இருக்க வேண்டும் இந்தி ஆட்சி மொழியாவதை ஏற்றுக்கொள்ள மாட்டோமென்றோ முடிவாய் அறிவித்து விடவேண்டும். அதுவல்லாது ஆங்கிலம் இடைக்காலம் வரை நீடிக்க வேண்டும்; இடைக்காலம் வரை நீடிக்க வேண்டும் என்றால் எந்த இடைக்காலம் வரை நீடிக்க வேண்டும்

என்பதுதான் நமக்குப்புதிராக இருக்கிறது. அவர் குறிப்பிடுகின்ற இடைக்காலம் எஃது என்பதைத் திட்டவட்டமாய் நமக்கு அறிவிக்க வேண்டும்.

தி. மு. க. வினரில் சிலரும் நேரு கொடுத்த உறுதி மொழியை 'மைய அரசு' மறந்து விட்டது-அவரது உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் கூறி வருகின்றனரே யன்றி, இந்தி மொழியை எக்காலத்தும் ஏற்கமாட்டோம் என்று ஒருமித்த முடிவோடு துணிவுடன் அறிவிக்கத் தயங்குகின்றனர். நேரு உறுதி மொழியைக் காப்பாற்ற வடவர்கள் முன் வந்தால் அவர்களுக்குத் தமிழக அரசு காலத்தைக் குறிப்பிடுவார்களா? நமக்கு நேரு உறுதிமொழியும் வேண்டா-அவரின் மகள் உறுதி மொழியும் வேண்டா. இந்தி மொழியே நமக்கு வேண்டா என்கிற பொழுது அஃதை அடிப்படையாகக் கொண்ட யாருடைய உறுதி மொழியும் நமக்குத் தேவையில்லை.

மாநாட்டில் தமிழக முதலமைச்சர் குறிப்பிட்டதுபோல் "அன்று மக்கள் மட்டும் இந்தியை எதிர்த்தனர். இன்று அரசும் எதி க்கிறது. ஆகையால் தமிழகத்துள் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தமுடியாது. அவ்வாறு புகுத்துவதை அரசும் பார்த்துக் கொண்டிராது" என்று மாணவர்களிடம் பேசியதிற்கொப்பத் திட்டவட்டமான தனது இரு மொழித்திட்டத்தைக் கூறிவிட வேண்டும். எங்களுக்குத் தமிழும் ஆங்கிலமுமே போதுமானது. இந்தி மொழியைத் தமிழுள்ளளவும் ஏற்க மாட்டோம் என்று வடவர்களுக்கு முடிவாக அறிவித்துவிடவேண்டும். இத்தற்கிடையில் யாருடைய கருத்துகளோ ஆராய்ச்சிகளோ நமக்குத் தேவையில்லை.

தமிழக மக்களும் தமிழ் மொழிக் கொள்கையில் ஒற்றுமை நிறைந்து உறுதியுடன் நிற்க வேண்டும். ம. பொ. சி. போன்றவர்களின் மொழிக் குழப்பத்தால் தமிழர் மூளைக் குழப்பமடைய வேண்டாவென்று வேண்டிக் கொள்கின்றேன். அன்பன்,

தி. கு. சண்முகம், மையக்கூட்டுறவு நில அடமானவங்கி, சென்னை-4.

சாவோம் வாரீர்!

அன்புடையீர்!

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழில் மறுமலர்ச்சி எழுந்துள்ளது. பன்னூற்றுண்டுக் காலமாக நம் செந்தமிழில் வந்து கலந்த பிறமொழிச் சொற்களும் எழுத்துகளும் களையப் பெற்று வந்தன-வருகின்றன. எல்லாருமே இதனை மேற்கொள்ளவில்லையாயினும் சில பேராயினும் இம்

முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஒரு சிலர் முழுமையாகவும், வேறு சிலர் அரைகுறையாகவும் ஈடுபட்டனர். இம் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமகனார் திரு. மறைமலையடிகளார் போன்றவர்களின் அடிபற்றி எத்தனையோ தமிழறிஞர்கள் முனைந்து ஈடுபட்டு,ஓரளவு வெற்றியும் பெற்று வருகின்றனர். தமிழின் இந்த மறுமலர்ச்சிக்குத் தி. மு. க. வும் அதன் தலைவர்களும் ஓரளவிற்குக் காரணம் என்றும் ஒப்புக்கொண்டு பெருமைப்படலாம்! ஆனால் அக்கட்சியினரும் தலைவர் களுமோ இந்த ஓரளவிற்கு என்பதை வன்மையாகக் கடிவர். முழுவ தற்கும் தாமே காரணம் என்று மார்தட்டிக் கொள்வர். 'அக்ராசனரை' அவைத் தலைவராக்கியதும், 'பிரசங்கத்தைச் சொற்பொழிவாக்கியதும். 'ராஸ்ட்ரபதி'யைக் குடியரசுத் தலைவராக்கியதும் 'மந்திரி'யை அமைச்ச ராக்கியதும், 'அபேட்சகரை' வேட்பாளராக்கியதும் தாமே என்று பறைசாற்றிக் கொள்வர்! மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ளலாம்!

பெரும்பகுதி மக்களைத் தம் எழுத்தாலும் பேச்சாலும் கவர்ந்துள்ள இவர்களால் இது போலவே இன்னும் பல பிறமொழிச் சொற்களையும், எழுத்துகளையும் களைந்திட முடியும் என்ற நம்பிக்கை தனித்தமிழ்ப் பற்றுளர் உள்ளங்களை ஊக்கியதும், மகிழ்வித்ததும் உண்மையே.

ஆயினும் அறிந்தோ அறியாமலோ சர்க்கார், பர்மிட், லைசன்ஸ், குரோதம், ஞாபகம், போனஸ், ஓட்டுப் போன்ற பிறமொழிச் சொற்களை யும், ஸ், ஷ்,ஜ்போன்ற வடவெழுத்துகளையும் கலந்தே எழுதிவந்தனர். இதற்கு "எதையும் மெல்ல மெல்லத்தான் மாற்ற வேண்டும். அப் போதுதான் மக்கள் முன்னிலையில் நிலையான இடம் பெறும்" என்றும் அமைவு கூறினர். உடனடி மாற்றத்தால் புரிந்துகொள்ள முடியாமல் பொதுமக்கள் அல்லற் படுவர் என்றனர். அவர்களைப் பொறுத்த அள வில் இதையும் சரியென்றே ஏற்றுக்கொள்ளலாம். அவர்கள் வேண்டு மானால் மெல்ல மெல்லவே மாற்றிக்கொண்டு இருககட்டும். ஆனால் முன்பே செப்பம் செய்யப்பட்ட நிலையினின்றும் வழுக்கி விழலாமா? சேற்றைப் பூசிக்கொண்டு மணச்சாந்தென்று மார்தட்டிக்கொள்ள லாமா? தாம் எழுதுவதும் பேசுவதும் தனித்தமிழ் அன்று என்பதை மறைக்காமல் ஒப்புக்கொண்டாகல் வேண்டும். ஆகவே கலப்புத் தமி ழையே! இனியும் எழுதிக்கொண்டிருக்கின்ற இவர்கள் செந்தமிழ்க் கெனச் செயல் புரியும் செம்மல்கள் என்றும், தமிழவேள்கள் என்றும் தமிழ்த்தாயின் தலைமக்கள் என்றும் பீற்றிக்கொண்டு திரிவதை விட்டு விடவும் வேண்டும்.

தி, மு. க. வினரின் இதழ்களில் தலையானதெனக் கருதப்படும்- பெரும்பகுதி மக்களால் தமிழ் வளர்ச்சி ஏடு எனப் பேசப்படும் முரசொலி (24-10-67 ஆம் நாளிட்ட) தாளிகையில், முதல்பக்கத்தில் வெளியாகியுள்ள இந்த வெட்கக் கேட்டைப் பாருங்கள் :—

முரசொலிக்கு ராஜாஜியின் கடிதம்!

முரசொலி கம்பாசிடர்களுக்கு ராஜாஜி விண்ணப்பம் ;-

விஜயகுமாரி, ராஜஸ்ரீ, ராஜேந்திரன், விஜயராணி, ஜெயலலிதா, எம். ஜி. ஆர். ஆகிய இவ்வளவு பேர்களும் "ஜ" எழுத்தைப் பெற்று விளங்குகிறார்கள். என் பெயர் மட்டிலும் என்ன பாவம் செய்தது? பவணந்தியாராவது, தொல்காப்பியனாராவது படக்கலையிலுள்ளவர் களுக்கு மட்டும் ஜகரம், அரசியல்காரர்களுக்கு ஜகரம் இல்லை என்று விதிக்கவில்லையே? ராசாசிக்குப் பதில் 'ராஜாஜி' என்று எழுத்துக் கோக்கலாமே!

அன்புடன்,

16—10—67. இராஜகோபாலாச்சாரி.

குறிப்பு :- முரசொலிக்கு திரு. ராஜாஜி அவர்கள் எழுதிய கடிதத்தை மேலே பூரிப்புடன் வெளியிட்டுள்ளோம். அவர்களுக்கு நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறோம். இனி ராஜாஜி அவர்களின் கருத்துப்படியே அவரது பெயரை வெளியிடு கிறோம். (ஆசிரியர்)

இதை இவர்கள் 'பூரிப்புடன்' வெளியிட்டுள்ளார்களாம்! இந்த மடலை எழுதியமைக்காக திரு. இராசாசி அவர்களுக்கு நன்றியினையும் தெரிவித்துக் கொள்ளுகிறார்களாம்! இனி அவரின் கருத்துப்படியே அவரின் பெயரை வெளியிடுவார்களாம்! இது தமிழரின் ஏமாளித் தனமா? இல்லை கோமாளித்தனமா? பார்ப்பனரின் நரித்தனத்திற்கு எத்துணை வலிவு! இந்தப் பாழாய்ப்போன தமிழினத்திற்கு எத்துணை இழிவு? நரம்புகள் புடைக்கின்றனவே! நெஞ்சமே வெடித்திடும்போ லிருக்கின்றதே! மறுமலர்ச்சி இதழ் என்று மார்தட்டும் இந்த ஏடு இப்படி மண்டியிடுவது ஏன்? இந்த மண்டியீட்டால் அத்தனைத் தமிழ்ப் பற்றாளரின் தலைகளும் கவிழவில்லையா? முரசொலி போன்ற தி. மு. க. ஏடுகளும், தலைவர்களும் செய்து வந்த ஓரளவு தமிழ்ப்பணி கண்டு அவ்வளவிற்கேனும் உண்மைத்தமிழ்ப் பற்றாளர் மகிழ்ந்தனர்- நன்றி தெரிவித்தனர். முழு மறுமலர்ச்சியும் பெற்றுத் தனித்தமிழ் மணங்கமழச் செய்யவெனில் தி. மு. க. வும் அதன் ஆட்சியும் இன்றியமையாதவை எனவும் நம்பிக் கிடந்தனர்.

ஆனால் அந்த நம்பிக்கையில் பேரிடி விழுந்திருக்கின்றது. திரு. இராசாசியின் மடலைக் கண்ட இவர்கள், "இனிமேல் திரைப்படத் துறையினரின் பெயர்களிலும் இன்னபிறவற்றிலும் உள்ள வடவெழுத்துகளும் அறவே களையப்பெறும். இதனைச் சுட்டிக் காட்டியமைக்கு திரு. இராசாசி அவர்களுத்கு நன்றி'' என்றெழுதியிருந்தாலன்றோ தமிழின் மானம் காக்கப்பெற்றிருக்கும்.இவர்களும் தமிழ் வளர்ப்பவராவார்கள். அந்தோ! நடந்திருப்பதோ தமிழின் – தமிழரின் மானத்தை இழிவு ஒப்போலைக்கு விற்க முனைந்த செயலாகவன்றோ இருக்கின்றது.

தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்பதை மாற்றி, தமிழ் எங்கள் உயிருக்கு மேல் என்று உயிரை விட மேலான தமிழ் நாடுகின்றவர்கள் மட்டுமே தமிழைக் காக்க முடியும். ஐயகோ! இப்படி உயிரை விட்டவர்களையும் உங்களின் பட்டியலில் சேர்த்துக்கொண்டு அரசியல் வேட்டையாடுகிறீர்களே! ஏ... ஏமாளித் தமிழர்களே, இனி யாரை நம்புவீர்கள்? இனி என்னதான் செய்யப் போகின்றீர்கள்? இவர்களைப் போலத் தமிழை விட்டுவிடப் போகிறீர்களா? இல்லை உயிரைவிடத் துணிவீர்களா? செத்துத் தொலைப்போம் வாருங்கள்! நமது சாவையும் பயன்படுத்தி இத்தகையார் தம்மை வளர்த்திட இடமின்றித் தமிழை வளர்த்திடச் சரியான வழியில் சாவோம் வாருங்கள்.

28-10-67 இரும்பொறை, தேனி.

தென்மொழி,கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வோர் ஆங்கிலத்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்:	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

- தமிழக மகளிர்க்கொரு தனித்தமிழ்ப் பெட்டகம்!
- இல்லறம் பேணும் நல்லறப் பெண்டிர்க்கொரு தாயகம்!
- தமிழ்க்குலப் பெண்மணிகளின் கண்மணி!

பாவை

மகளிர் திங்கள் இதழ்!

ஆசிரியர்

குருமணி

தைத்திங்கள் முதல் நாளன்று மலரவிருக்கின்றது.

தனியிதழ் 50 காசு. ஆண்டுக் கட்டணம் உரு: 6-00.

எல்லா ஊர்களுக்கும் முகவர் தேவை.

எல்லா விளக்கங்களுக்கும்:

பாவை

சிதம்பரம் (தெ. ஆ.)

தமிழ்ச்சிட்டு

- 'தென்மொழி' வெளியிடும் குழந்தைகளின் தனித்தமிழ்க்கலை இதழ்! மாத வெளியீடு.
- 20 பக்கங்கள்—15 காசு:
- அறிவியல், மொழிப்பயிற்சி, வரலாறு, உலகச் செய்திகள், சிறுகதைகள், துணுக்குகள், புதிர்கள் முதலிய எண்ணிறந்த செய்திகள்.

உங்கள் குழந்தைகள் படிக்கின்றனவா?

இல்லையேல் அவர்களை இன்றே உறுப்பினர்களாக்குங்கள்.

ஆண்டுக் கட்டணம் 2 உருபா.

தமிழ்ச் சிட்டு: கடலூர்-1.

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உழகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனுல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனேவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களே
ஒன்று திரட்டி, உரிய பொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

பின்வரும் சொற்களேத் தொகுத்து விடுத்தவர்:

திருவாட்டி: ப. தாயம்மாள். தமிழாய்வுத்துறை,
கேர்ளப் பல்கலேக் கழகம், திருவனந்தபுரம்.

அருந்தல்–அருமை. *சீமைச்சக்காய் இங்கு மிக அருந்தல்தான்.*

அழுக்கறை–பல செய்திகளேப் பிறர் அறியாவாறு அடக்கி வைப்பவள் இவள் பொல்லாத அழுக்கறை.

உக்குதல்–கெட்டுப்போதல் [நொந்து போதல்] ஐயோ! மீன் உக்கி விட்டதே.

வயிற்றுப் பக்காளி–சோறு நிறைய உண்பவன். திண்ணிப் பக்காளி என்றும் கூறுவதுண்டு.

சப்புச் சவறு-குப்பை கூளம்

இந்த அறையில் சப்புஞ் சவறும் அடைஞ்சு கிடக்குது

தக்கு புக்கு–தாறுமாருக

ஏனத்தை மெதுவாகக் கொண்டுசெல். தக்கு புக்கென்று போட்டு உடைத்துவிடாதே.

சள்ளு புள்ளு–சினத்தால் பேசுவது

சள்ளு புள்ளு என்று என்மேல் எரிந்து விழுந்தாள்.

நட்டியும் குட்டியும் நாழியும் உழக்கும்.

கால இடையிடின்றி அடுத்தடுத்துப் பல குழந்தைகள் பிறப்பின் அவற்றை நட்டியும் குட்டியும் நாழியும் உழக்கும் என்று நாஞ்சில் நாட்டினர் கூறுவது உண்டு.

சீண்டிரம்–தொல்லே

நேரிடையாக உருபா 10 விடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: இரா. அரங்கநாதன், அவிநாசி; ஓர் அன்பர், சென்னை-1; ம பிரகாசம். சென்னை-20 (3) 30-00

நேரிடையாக உருபா 15 விடுத்த அன்பர்கள்:

வள்ளுவர் இலக்கியக்கழகம். திருக்காரவாசல். நாகை. திரு. ச. சுப்பிரமணியன் மற்றும் அவர் நண்பர்கள், சென்னை-8. 30-00

தொகுத்து விடுத்தவை:

வள்ளுவர் இலக்கியக் கழகம், திருக்காரவாசல், நாகை. வழி:

திருவாளர்கள்: அ. சிங்காரவேலு; ந. ஞானசம்பந்தம்; சோ. பரமசிவம்; தெ. சுப்பையா; சி முருகையன்; செகந்நாதன்; தி. ஆனந்தன்; இரா. கலியாணசுந்தரம்; மா. தமிழ்மணி; அ. மதியழகன் ஓர் உருபா மேனி. 10-00

வள்ளுவர் இலக்கியக்கழகம், திருக்காரவாசல். 5-00

திரு த. ஆரோக்கிய அரசு, புதுவை அவர்கள் வழி;

திருவாளர்கள்; ம. கந்தசாமி; க. நடராசன்; 2 உருபாமேனி 4-00

திரு. வை. ஆலாலசுந்தரம். 1-00

திரு. த. ஆரோக்கிய அரசு. 5-00

திரு. நா. இளமாறன், பரளி மின் நிலையம். கோவை வழி.

திரு. நா. இளமாறன். 10-00

பரளி உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள். 8-00

திருவாட்டி அ. இராச இலக்குமி; (உலகநாதபுரம், திருச்சி.) அவர்கள் திருச்சி தொலைபேசி நடுநிலையத்தின் சார் பாகத் திரட்டி விடுத்த தொகை. 30-00

திரு. விநா. இராதா கிருட்டிணன் (47, இளங்கோமணி அ. ப. க. கழகம்) அவர்கள் வழி.

திருவாளர்: வி. நா. இராதாகிருட்டிணன் 6-00

திருவாளர்கள்: மு. கணபதி; வ, கிருபானந்தல் (தலைக்கு 5 உருபாமேனி) 10-00

திரு. அ. இராமலிங்கம் 2-00

திருவாளர்கள்: பூ. விசயராகவன்; கோ. செம்பியன்; இரா. அண்ணாமலை; ந. சுப்பராயலு; சோ. ஆர்தர் பிலிப், இராசேந்திரன்; கி. சிதம்பரம். அரங்க. இராசசுந்தரன்; (தலைக்கு ஓர் உருபா மேனி) 7-00

அர்த்தனாரி; இராசமாணிக்கம்; கிருட்டிணன்; சொ. பழனியப்பன்; கா. உசேன்சரீப்; அ. மோகன்ராசு முதலியோர் (தலைக்கு 50 காசு மேனி)	8–00
திருவாளர்கள்: தொ. க. கலியாணசுந்தரம்; சி. அய்யாச்சாமி; (தலைக்கு 30 காசு மேனி)	0–60
திரு. காட்டூர் அன்னையன்பன். சேலம்.	1–50
திரு. தாரமங்கலம் நச்சினார்க்கினியன்.	1–25
மற்றும் நூற்று முப்பத்தொன்பது. அன்பர்கள் (தலைக்கு 25 காசு மேனி)	34–75
மொத்தம்:	341–35

(தொடரும்)

ஆசிரியர்.
மன்னர் மன்னன்.

○ பாவேந்தர் பாடிய 'குயில்'பாவேந்தரைப் பாடுகிறது!

○ 'நினைவு மண்டபம்' படியுங்கள்!

தனியிதழ் 75 காசு.
ஆண்டுக்கட்டணம் 10 உருபா.

பாரதிதாசன் குயில்,
புதுவை-1.

பாவேந்தர் நன்றிக்கடன்.

தென்மொழி விடுத்த வேண்டுகோளுக் கிசைந்து அன்பர்கள் பாவேந்தர் தம் குடும்ப நலத்திற்கென விடுத்த நன்கொடைப் பட்டியலைக் கீழே தருகின்றோம். தென்மொழியின் வேண்டுகோளைச் செவி சாய்த்து நன்றிக் கடனாற்றிய அன்பர் யாவருக்கும் எம் அன்பு கலந்த வணக்கமும் வாழ்த்தும் உரிய வாகுக.

கீழுள்ள பட்டியல் யாவும் பாவேந்தர் மகன் திரு. மன்னர் மன்னன் அவர்களால் கொடுக்கப் பெற்ற பணவிடைச் சாத்துகளை ஒப்பிட்டே தரப்பெற்றதாகையால், விடுபட்டுப் போன அன்பர்கள் யாவரும் இது குறித்துப் பாவேந்தர் மகனுக்கே மடல்கள் எழுதக் கேட்டுக் கொள்கிறோம். ஆ-ர்

உருபா

நேரிடையாக ஓர் உருபா விடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: சித்தார்த்தன், சென்னை-1; வெ. பாசுகரன், மதுரை; வை. கந்தசாமி, கூறைநாடு; வீ. வரதராசன், பாவநாசம் (1.25) — 4.25

நேரிடையாக 2 உருபா விடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: மு. கா. முகைதீன், பம்பாய்-5 ; மு. பரமசிவம், விளாமுத்தூர் (பெரம்பலூர்); க. அ. முருகேசன், கோவை; மணிமொழி, மோப்பிரிப்பட்டி; (அரூர்); நா. த. மணி, சென்னை-23; குமு. இமயவரம்பன், மிதிலை (திருச்சி) 6. 12-00

புலவர், திரு. நா. செங்குட்டுவன்-பழனி. 3-00

நேரிடையாக உருபா 5 விடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: ஞா. அந்தோனியரசு, விரியூர்; கு. வெற்றியழகன், சென்னை-5; சு. ஐயம்பாண்டி, தூத்துக்குடி-4; இர. இராமானுசன், சென்னை-1; செயலர், அஞ்சலக மனமகிழ்மன்றம், திண்டுக்கல்-1; ந. பாலசுப்பிரமணியன், நீடாமங்கலம்; சு. சுப்பிரமணியன், திருச்சி-8; திருவாட்டி. இரா. நீலாவதி, சென்னை-33. (8) 40-00

இது என்ன சீண்டிராம் பிடிச்ச வேலையாக இருக்கிறது.

கயந்தலை-சிறு குழந்தை

அவள் ஐந்தாறு கண்ணும் கயந்தலையும் உடையவள்.

குட்டுப்பாடு-கள்ளத்தனம்

உன் குட்டுப்பாடு வெளிப்படாமல் இருக்காது.

சவறு-உருவற்ற ஊன் பிண்டம்

அவளுக்கு நான்கு மாதத்தில் சவறு விழுந்துவிட்டது.

ஏய்ப்பித்தல்-சேர்த்தல்

இதைக்கொண்டு அவனிடம் ஏய்ப்பிச்சிடு.

தாப்பு-ஒத்த அளவு

இந்தப் பெண் நல்ல தாப்பாக இருக்கிறது.

கண்ணி-பசுவின் கழுத்தில் கட்டப்படும் கயிறு.

சிறை-தொல்லை

பூட்டு-வாழை இலை இரண்டு கொண்டது ஒரு பூட்டு.

உலும்பல்-பேறு நடந்த வீட்டில் வீசும் வாடை.

சீமைத்தனம்-சுட்டித்தனம்—சீமைத்தனம் காணிக்காதே

வல்லம்-தென்னை ஓலையாலான பெட்டிபோன்ற ஒன்று.

பட்டை-பனை ஓலையாலான நீர் இறைக்க உதவும் வாளி போன்ற ஒன்று.

பறனி யளத்தல்-புறம் பேசல்

தெம்மாடி-திறனில்லாதவன்

மெனக்கெட்டு-விணாக

எசலிப்பு-சண்டை

ஏந்தல்-உதவி

பொல்லாப்பு-வம்பு

வாளாமை-தீட்டு

தட்டு-மச்சு

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்.

திரு. அ. தெ. இரகோத்தமன் 2/63, வள்ளலார் தெரு,

அறங்கண்டநல்லூர் (அ. நி.) தெ. ஆ. மாவட்டம்.

எரவாணம்-கூரையின் உட்பக்கம் [Ceiling]

இராவெடி-தொல்லை

காந்தல்-சோறு, கூழ் ஆக்கிய பானையின் [அடியில்] ஒட்டிக் கொண்டிருக்கும் தீய்ந்த பகுதி.

கரப்போக்கு-தந்தை பெயர் தெரியாத மகவு.

வல்லிசாக-முழுதாக

சாயக்கால்-செல்வாக்கு

நறுவிசு-ஒழுங்கு

வாட்டம்-ஏந்து

வாட்ட சாட்டமான-நல்ல உடற் கட்டுடைய

நாவு-பெண் எருமை

வெண்டையம்-மாட்டின் கழுத்தில் கட்டப்படும் உருண்டையான மணி.

மேவுதல் – மதிக்கப்படுதல்.

தாவு அறுத்தல் – மிகவும் தொல்லை தருதல்.

பூட்டுக்குச்சி – திறவுகோல் (key).

கங்காணம் – நில உடைமையாளனுக்கு வாரத்திற்குப் பயிரிடுகின்ற உழவன் தரும் ஒருவகைப் படி.

சூட்டுக்கயிறு – நெற்றூள்களை கட்டினாற்போல் பிடித்துக்கொண்டு (நெற்கள் உதிர) அடிக்கப் பயன்படும் கயிறு.

அள்ளு குத்துதல்– (நுகத்தடியில் மாட்டின்கழுத்தை இணைக்கப் பயன் படுத்தும்) பூட்டாங் கயிற்றை நெருக்குதல்.

பக்கா – பெரிய, தரமான.

கச்சா – சிறிய, தரங்குறைந்த.

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவா:

இரா. காராளன் – சேலியமேடு.

நெட்டு-பனம்பாளையின் மேற்பட்டைக் குருத்து.

அலவரை அல்லது கூக்கான்-ஏற்றுப்பனையின் பூ.

சிறுவோணம்-சிற்றிருப்பு (சிறு சேமிப்பு).

சிறவி-நீர்ப்பறவைகளுள் ஒன்று.

கொண்டகம்-கால்நீர் தடுக்கும் சிறுமதகு.

தத்துக்குத்தல்-நிலையின்மை.

போரை-உள்ளிடற்றுப் போதல், மரங்களின் உட்பகுதி பழுதடைதல்.

பீத்தை-பள்ளாங்குழி ஆடுங்கால் தோற்றவர் பக்கத்தில் காயின்றி ஆடப் பயன்படாத குழி, வெறுமை.

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்:

மா. முத்துசாமி, தமிழாசிரியர், சாத்தனூர். வ. ஆ.

அதக்குதல்-மாட்டை ஏதேனும் ஒரு வேலைக்குப் பயிற்சியளித்தல்.

அடாசு-இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் பொருள்.

சாட்டைக்கூடை - கேழ்வரகுக்கதிர்களை வாரிச்செல்லும் பெரிய கூடை.

நறுவிசு – செம்மை (நறுவிசாகப் பேசு).

துக்குதல்-புடைக்கத் தின்னுதல்.

நோணவட்டம் பேசல் – வக்கணை பேசல்.

தாங்கள் விருப்பு-வெறுப்பின்றி, உண்மை உயரவும்-உயர்தமிழ் வாழவும்-மானத்தமிழர் மாண்டு போகவில்லை இம் மறமண்ணில் என்பதை நிலைநாட்டவும் சீரும்-சிறப்பும்-பேரும் புகழும்-அறிவும் ஆற்றலும் கொண்ட, "தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழியே" ஆசிரியவுரையைத் தந்தீர்கள். அது கார்உள்ள வரை-காற்றுள்ள வரை-உயிருள்ள வரை-உலகுள்ள வரை சான்றோர் போற்றிப் பாராட்டும் பொன்னுரையாகும் என்பதைப் பன்னூறுமுறை பாங்குடன் பகர்வேன் யான். 'தன்னிலை மறந்த தமிழர்க்குத் தங்களுரை முன்னிலை உணர்த்தி முழுவுணர்வூட்டுமாக'! இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழும் முறை சாற்றிடும் தாங்கள், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் பெற்றியரே! பெருகுக நும் நல்வாழ்வு! வளர்க இறைத் தமிழ்த்தொண்டு! அன்புப் பெருக்கால் உருபா 5 இன்று அனுப்புகிறேன். இன்புடன் பெறுக.

—தாமரை, 62, பாசியம் நகர், பெங்களூர்-21.

○ தமிழ்த்திரு ஐயா, துலாம் இதழின் ஆசிரிய உரைக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பதினறு பக்கங்களையும் ஆயிரமாயிரம் படிகளாய் அச்சிட்டுத் தமிழில் என்ன இருக்கிறது எனக் கேட்கும் அறிவிலிகட்கும், தமிழ் பற்றி அறியாத பிற நாட்டார்க்கும் கொடுக்கலாம் எனத் தோன்றுகிறது. அவ்வுரை தங்கள் புலமைக்கு ஓர் அச்சாணி. தமிழர் தந்தை பெரியாரைப் பார்ப்பானுக்குக் காட்டிக் கொடுக்காத முறையில் எழுதிய பெற்றி தங்கள் பண்பின் தகைமையே. அடுத்து, அரசியல் கிழமை ஏடு ஒன்று தொடங்க திட்டமிட்டுள்ளீர்கள். இஃது இப்போதைக்குத் தேவையில்லை. பொருள் நிலைகுறித்தே இப்படிச் சொல்கிறேன். தங்கள் ஆசிரியவுரை ஒன்றே ஆயிரம் அரசியல் ஏடுகளுக்குச் சமம். எனவே தென்மொழியைக் கிழமை ஏடாக்க விரைவில் முயலுங்கள்.

—பெ. மணியரசன், ஆச்சாம்பட்டி (அஞ்) தஞ்சை மா. வ.

○ ஐயா, 'தமிழ் காட்டு மிராண்டி மொழியே' உள்ளக்கிளர்ச்சியும் அறிவெழுச்சியும் ஊட்டியது. 'நூறுசிரியம்' பாடல் கோடி பெறும்; விளக்கம் கோடியினும் பெரிது பெறும். 'ஐயாவின் உள்ளும் புறமும் போல் அமைந்த தமிழ்ச்சிட்டை, தென்மொழியைப் பாராட்டலும்-பேசுமிடமெல்லாம் பரப்பலும் செய்து வருகின்றேன் யான். இவண்,

அறிவன்புமலர், பறமக்குடி, முகவை. மா. வ.

○ ஆசிரியப் பெருந்தகையே! தணியாத் தமிழார்வங் கொண்ட என்னனைய இளமுள்ளங்களை ஊக்கமொடும் ஆக்கமொடும் ஆற்றுப்படுத்தும் தன்மை, நெறி தவறும் எவரையும் நேர்மையாகக் கடிந்துரைத்து நெறிப்படுத்தும் முறைமை, மொழி, இனம், நாடு இவை சிறக்க இசையும் எவரையும் இன்பத்தில் ஆழ்த்தும். தங்களின் நல்லெண்ணம் நிறைவடையும் நன்னாள் விரைவில் வந்தடைவது திண்ணம். அதற்குரிய தங்களின் சீரிய தமிழ்ப்பணிக்குத் தமிழன் நெஞ்சம் மலர்ந்து மறவாமல் உறுதுணை நல்கும்.

—கோ. தேவராசன், சட்டக்கல்லூரி, சென்னை.

○ பேரன்புடையீர்! உங்களின் அயராத தனித்தமிழ் உழைப்புக்கு எம்போன்ற காளையரின் பங்கு எப்போதும் தொடர்ந்து இருந்துவரும். என் குருதி நாளங்களில் தனித்தமிழ் இசைமீட்டிப் பண்பாடுகின்றது. எவ்விடர்ப்பாடு வரினும் சுணங்காத நெஞ்சுடன், சாயாத தலையுடன், நிமிர்ந்த நடைபோட்டு உலாவிவர வேண்டுகின்றேன். தமிழ்த்தாயின் அணைப்பும், நல்லோரின் துணையும் தனித்தமிழ் உள்ளங்களின் அயராத உறுதிவாய்ந்த துணையும் எக்காலும் தங்களுக்கு இருந்தே வரும்.

—பொன். தங்கவேலன், வான்படை நிலையம், சாம்நகரம், குசராத்து.

△ 'தென்மொழி'யில் தொடர்ந்து சுவை தந்த தேனடை!
△ நூல் வடிவில் வெளிவருகிறது!!
○ மெய்ம்மைக் காதலுக் கேங்கிய
பேதைப் பெண் ஒருத்தியின் நெஞ்ச ஓவியம்!
○ வாய்மை காதல் வாயாவிடத்து – அதனைத்
தாய்மையாய்க் கனிவித்துக் கொண்ட,
தூய நெஞ்சின் துயர மாமழை
○ காதல் நுகராக் கன்னி இளமான்!
மாதர் தெய்வம்! மங்கையர் விளக்கம்!

துரை - மாணிக்கம்

எழுதிய

இனிய தனித்தமிழ்ப் பாவியம்!

□ அழகிய மூவண்ண அட்டை!
○ விலை ஓர் உருபா.
○ விற்பனையாளர்க்கு 10 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
○ தேவைக்கு முகூட்டியே எழுதுங்கள்.
○ அஞ்சலில் தனியிதழ் வேண்டுவோர் உருபா 1-25 விடுக்க.

விளக்கங்களுக்கு:-
கடலூர்-க.
தென்மொழி

தென்மொழி மின அச்சகம், கடலூர்-1.